
www.tamilarangam.net

# தூண்டில்




TAMILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO | NR. 4

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

A/L சித்தியடைந்த இந்து … ாள மணப் பெண்ணுக்கு … மணமகன் தேவை. சீதனமாக வீடு, காசு நகை கொடுக்கப் … ஜாதகக் குறிப்புடன் … விண்ணப்பிக்கவும் விளம்ப …

… ந்து வேளாள … ஓர் 34 வயதுடைய … நல்ல பதவி வகிக்கும் … மகனை எதிர்பார்க்கிறார்கள். … உடைய மணமகனை … சீதனம், வீடுவளவு, தோட்டம் … நகை, ரொக்கம். சொந்தக் … கடை, வைத்திருக்கும் … கும் மாற்றுச்சம்மந்தம் … கொள்ளப்படும். விபரம் … டன் தொடர்புகொள்ளவும். G-1087, …

… 2'' A/L Partly Qualified Commerce Accountancy மகளுக்கு 32 வயதிற்… ட்பட்ட அக்கவுண்… நன்கு படித்த கௌரவ … தொழில் புரியும் … வியாபாரம் நடத்தும் … மகன் தேவை. சீதன … ணமும், நகையும் … க்கப்படும்.

பட்டதாரி மணமகன் … 13, உயரம் 6 அடி. செவ்வாய் … குற்றமற்றவர். … ஐரோப்பிய நாட்டு … கம்பனியில் நிரந்தரமாக … வியில் உள்ளார் … வெளிநாடு செல்லக் … ராக இருத்தல், வேண்டும் … முதல்கடிதத்திலே … குறிப்பு, குடும்ப … விபரங்களை …

www.tamilarangam.net

# சீ.... தனமே!

இன்றல்ல, நேற்றல்ல நாங்கள் அறிந்த காலம் முதல் தமிழ் சமு
தாயத்தால் எழுதப்பட்டுவரும் சமூகத் தொடர்தான் சீதனம். முற்றும்
எப்போது என்று ஆசிரியர்களாலும், வாசகர்களாலும் கூறப்படாம
லேயே இந்தத் தொடர் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. கொலை
கொள்ளை, சண்டை, சோகங்கள் நிரம்பிய இத் தொடரின் ஆதரவாளர்
கள் யார்? தொடருவதற்கு உறுதுணையாக நிற்பவர்கள் யார்? இவர்களை
தூண்டிக்கொண்டிருக்கும் காரணிகள் என்ன?

அகால மரணங்களைச் சுமந்து கொண்டு இலங்கையிலிருந்து பற
ந்து வரும் தமிழ்ப் பத்திரிகைகளைப் புரட்டினால் இரண்டாம் பக்கத்தி
லேயே நம் கண்ணில் படுவது மணமகன், மணமகள் தேவை விளம்பரங்களே.
சாதி, சமயங்களை விசாரித்தபின் பணம் தேவை என்று பகிரங்கமாக
வெட்கமின்றி அறிவிக்கப்படுகிறது. புறநிலைக் காரணிகள் எதுவும் என்னைப்
பாதிக்கவேயில்லையே என்று சீதனப் பேய் எல்லோரைப் பார்த்தும்
கேலி செய்கிறது.

அநேகமான தமிழ் கதைகளிலும், கவிதைகளிலும் சீதனம் இன்னும்
மறக்கப்படவில்லை. சீதனக் கொடுமையால் தற்கொலை செய்து கொள்
ளும் பெண்களைப் பற்றிய செய்தியும் குறையவில்லை. நாளாந்தம் கண்ணு
க்கு முன்னாலேயே திருமணப் பேரங்களைக் காணக்கூடியதாக இருக்கிறது.
தமிழர்கள் எங்கேயோ நானும் அங்கே என்று இன்று சீதனமும் வெளிநா
டுகளில் வசதியாக குடியிருக்கிறது. ரொறன்ரோவில் வீடு கேட்கும் துணி
ச்சல் இன்று சீதனத்திற்கு வந்து விட்டதை சென்ற இதழில் கனேடிய

www.tamilarangam.net

தமிழ்ச் சஞ்சிகை ஒன்று அறியத் தந்தது.சந்திர மண்டலத்திற்கு ஆம்ஸ்ரோங் போகாமல் ஒரு ஆறுமுகம் போயிருந்தால் அங்கேயும் நிச்சயம் சீதனத்திற்கு குடியுரிமை கிடைத்திருக்கும்.

'மாப்பிள்ளை பெரிய எஞ்சினியர்', 'மாப்பிள்ளை லண்டனில', மாப்பிள்ளைக்கு கவுண்மேந்து உத்தியோகம்' இப்படி தங்களுக்கு வரப் போகும் மருமகனின் பெருமைகளைக் கூறித் தங்கள் பெண்களின் தரங்களைத்தாங்களாகவே குறைத்துக் கொள்ளும் தாழ்வுமனப்பான்மையுள்ள பெற்றோர்கள் சீதன ஆதரவாளர்களில் ஒரு பிரிவினர்.இதே போல இப் பந்தியின் தொடக்கங்களிலுள்ள வசனங்களிலிருக்கும் 'மாப்பிள்ளை'க்குப் பதிலாக 'அவர்'எனப் போட்டு பெருமைப்பட்டுக் கொள்ளும் போலிக் கௌரவத்தால் பீடிக்கப்பட்ட பெண்கள் சீதன ஆதரவாளர்களில் அடுத்த பிரிவினர்.தங்களால் போற்றப்படும் 'தராதரங்கள்' உள்ளவன் மட்டுமே ஆண்மகன் என்ற நினைப்பை இந்த இரண்டு பிரிவினரும் நிச்சயம் மாற்றிக் கொள்ள வேண்டும்.அன்றாடம் கூலி வேலை செய்யும் ஒருவனும் தனது குடும்பத்தைக் காப்பாற்ற முடிகிறது.அந்தக் குடும்பத்திலும் அன்பு பாசம் இருக்கிறது.வேட்டியைக் குறுக்காகக் கட்டிக்கொண்டு மண்ணுக்குள் விவசாயியால் தன்னுடைய மனைவி, பிள்ளைகளை மட்டுமல்ல மற்றவர்களையும் காப்பாற்ற முடிகிறது,வெளித் தோற்றத்திலும், பகட்டிலும், போலிக் கௌரவத்திலும் அன்பும், பண்பும், உழைப்பும் தங்கியிருக்கவில்லை என்பதை 'மாப்பிள்ளை'பெருமை பேசும் பெற்றோரும், 'அவர்'பெருமையைப் பீற்றிக் கொள்ளும் பெண்களும் புரிந்து கொள்ள வேண்டும். மாப்பிள்ளைகள் 'உயரத்தில்'இருப்பதாக நினைத்துக் கொண்டு சீதனத்தின் மூலம் அவர்களை எட்டிப்பிடிப்பதாகக் கருதிக் கொண்டிருக்கும் பெற்றோரும், பெண்களும் தமது கருத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். முடியாதென்றால் தலைகுப்புற விழுந்தபின் வருத்தப்படக் கூடாது.நீளக் காற்சட்டைக்காகவும், பதவிகளுக்காகவும், அந்தஸ்துக்காகவும் துடித்துக் கொண்டிருப்பவர்கள் ஏற்கெனவே அந்த மாதிரி ஆசைப்பட்டு மேல் மட்டங்களில் சிக்கியிருக்கும் பெண்களைப் பேட்டி கண்டால் உண்மை நிலையைத் தெரிந்து கொள்வார்கள்.பகட்டுக்கும், பசப்புக்கும் ஏமாந்து சீதனமாகக் கொட்டிக் கொடுப்பதை விட மண்ணில் அல்லது கடலில் நிற்கும் ஒருவனைத்திருமணம் செய்து கொள்வதே சாலச் சிறந்தது என்பதை தெளிந்த மனதுடைய பெண்களால் சுலபமாகப் புரிந்து கொள்ள முடியும். இத்தகைய பெண்கள் தங்களுடைய பெற்றோரின் மாயையும் தைரியமாகச் சுட்டிக் காட்டித் திருத்த வேண்டும்.போலிக் கௌரவத்தை நாடி தங்களுடைய பெண்களை சீதனச் சந்தைக்கு கொண்டு செல்லும் பெற்றோர்கள் தாம் பிடிக்கும் மாப்பிள்ளைகள் பெண்ணென்று பணத்தையும்,குணமென்று பொன்னையும், அழகென்று காணியையும்தான் மணந்து கொள்வார்களே தவிர வாழ்க்கையை அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'என்ரை அக்கா, தங்கச்சிக்காகத்தான் நான் சீதனம் வாங்கினேன்' என்று சொல்லித் தங்களுடைய செயலை நியாயப்படுத்தும் சகோதரர்களையும் பார்க்கிறோம். தன்னுடைய சகோதரிகளுக்காக தான் சீதனம் வாங்குவது போல், தான் திருமணம் செய்து கொண்ட பெண்ணுக்காகவும் அவளுடைய பெற்றோரோ, சகோதரரோ தங்களை வருத்தித்தான் சீதனத்தைத் தந்திருப்பார்கள் என்பதை இந்தச் சகோதரர்கள் ஏன் உணர்ந்து கொள்வதில்லை. இப்படியானவர்களால்தான் சீதனம் வட்ட வடிவில் சுழன்று கொண்டிருக்கிறது. இந்தச் சுழல் நிறுத்தப்பட வேண்டுமானால் அர்த்தமற்ற சீதனத்தின் பாதிப்புகளை இரு பகுதியினரும் புரிந்து கொண்டு மனமொத்து திருமணத்திற்கு ஒத்துழைக்க வேண்டும்.

தமது பெண்கள் வசதியாக வாழட்டுமேயென்றுதான் தாங்கள் சீதனம் கொடுப்பதாகப் பல பெற்றோர்கள், சகோதரர்கள் சொல்லிக் கொள்கிறார்கள். பணம் மட்டும்தான் தங்கள் பெண்களை வாழ வைக்கும் என்று இத்தகையவர்கள் நம்பினால் பேசாமல் தங்களிடமுள்ள பணத்தை வங்கியில் போட்டால் அவர்களின் பெண்கள் வட்டியில் சாப்பிட்டுக் கொண்டிருக்கலாமே. வீணாக திருமணம் என்பதைக் கொச்சைப்படுத்துவானேன்? திருமணம் என்ற போர்வையில் தங்கள் பெண்களை கட்டாயமாக விலத்தி வைப்பானேன்?. வாழ்க்கை என்ற கட்டிடத்தை பணம் என்ற அத்திவாரத்தில் அமைக்க முடியுமா என்பதை இவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்னும் சிலர் அயலவர்களுக்கும், மாப்பிள்ளை வீட்டாருக்கும் தமது கௌரவத்தைப் பறைசாற்றுவதற்காக தமது சக்திக்கு மீறி சீதனத்தைச் சேகரித்து பெண்களுடன் மாப்பிள்ளை வீட்டுக்கு அனுப்பி வைக்கிறார்கள். இவர்களுடைய இச்செயலால் தூண்டப்பட்ட மாப்பிள்ளையும், வீட்டாரும், தமக்குத் தேவையான போதெல்லாம் பணத்தைக் கொண்டு வா என்று பெண்ணை வருத்தும்போது கௌரவத்தை பறைசாற்றிய பெண் வீட்டார் என்ன செய்வார்கள்?

நல்ல சீதனம் பொருந்தும்வரை திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்று ஒற்றைக்காலில் நிற்கும் ஆண்களும், அவர்களை நிற்க வைக்கும் பெற்றோர்களும் குளம் வற்றும் என்று குடல் வற்றிச் செத்த கொக்கின் கதையை மறந்து விடக் கூடாது. இது போன்ற கல் நெஞ்சுக்காரர்களுக்குத் தெரியுமா, தமது முதல் பெண் பெரியவளானதும் 'பூப் புனித நீராட்டு விழா' வைக்கும் பெற்றோர்கள் அடுத்தடுத்து பெண்களே பிறந்தும் 'அந்த' நாளில் தமக்குள் அழுவதை.

இன்று வெளிநாடுகளில் பரிமாறப்பட்டுக் கொண்டிருக்கும் சீதனம்

www.tamilarangam.net

உலக அதிசயங்களில் இடம்பெற வேண்டிய ஒன்றாகும். தாய் நாட்டில் வடக்கு, கிழக்கென்றும், வன்னி, குடாவென்றும் சீதனத் தொகைகள் வேறுபடுவது போல் இன்று மேற்கு ஜேர்மனியில் பயேர்ன், நோர்த்றைன் வெஸ்ற்பாலியாவென்றும், பிரான்ஸில் பரிஸ், பரிஸுக்கு வெளியே என்றும், கனடாவில் ரொறன்ரோ, மொன்றியல் என்றும் சீதனம் நிர்மாணிக்கப்படுகிறது. வெளிநாடுகளிலுள்ள 'மாப்பிள்ளைகளின்' நிரந்தரமற்ற குடியுரிமை, வேலைகளை நம்பி தங்கள் வாழ்வை ஒப்படைக்க ஊரிலுள்ள வீடு, வளவு, நகை, நட்டு, சேமிப்பெல்லாவற்றையும் அழித்துச், சீதனத்தை 'பார்சல்' பண்ணிக் கொண்டு பல பெண்கள் இன்னும் ஆகாயக்கப்பலில் பறந்து வந்து கொண்டிருக்கிறார்கள். வெளிநாடுகளில் நடைபெறும் 'கலியாணக் கொண்டாட்டங்களுக்கும்' பெண் வீட்டாரிடமிருந்தே 'விருண்டப்'படுகிறது.

சீதனத்தைச் சுத்தமாக அழித்துவிட வழியேயில்லையா என்று ஏங்கும் இருபாலாரும் கணிசமானளவேனும் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்களின் பலம் குறைந்திருப்பதனால்தான் சீதனத்தை விரட்டுவது சிரமத்தைத் தருகிறது. ஆகவே எல்லோரும் ஒன்றாக பாடுபடவேண்டும். என்னென்ன வழிகளைக் கையாளலாம்?

சீதனத்தால் அநியாயமாகத் தள்புறுத்தப்பட்டிருக்கும் பெண்களுக்குச்சரியான வழியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பெண்கள் தங்கள் கால்களில் தாங்கள் நிற்பதற்கான வாய்ப்புகளை தமிழ் சமுதாயம் அவர்களுக்கு வழங்கவில்லை. அவர்களாக அதை ஏற்படுத்திக் கொள்ளவும் அனுமதிக்கவில்லை. இந்த உண்மையை முதலில் எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும். பெண்களை அநியாயமாக முடக்கி, சிறைப்பிடித்து வைத்திருக்கும் சமுதாய அமைப்பிலிருந்து பெற்றோர்கள் தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டும்—தங்கள் பெண்களுக்காகவேனும். தங்கள் பெண்கள் சுயமாக வாழத் தேவையான சகல சந்தர்ப்பங்களையும் அவர்களுக்குக்கொடுக்க வேண்டும். அதற்காக அவர்களை ஊக்குவிக்க வேண்டும். முடிந்தளவு தமது அனுபங்களிலும் பயிற்சியளிக்க வேண்டும். பெற்றோர்கள் அவசரமாக தமது பிள்ளைகளுக்கு மாப்பிள்ளை தேடுவதைவிட இவற்றையே முக்கிய கடமைகளாகக் கொள்ள வேண்டும்.

அடுத்தாகப்பெண்களின் பங்களிப்பே முக்கியமானதாகும். பணம் கொடுத்து மணம் செய்ய வேண்டிய அவசியம் என்ன? பணத்தால் மற்றவர்கள் எடைபோட அனுமதிக்க வேண்டுமா? பணத்தையே குறிக்கோளாகக் கொண்ட ஒருவனை வாழ்க்கைத் துணையாகப் பெறத்தான் வேண்டுமா? இப்படியானவர்கள் மட்டுமே உள்ள இடத்தில் திருமணம் செய்து கொள்ளாமலே இருந்தால் அந்த வாழ்க்கை கசக்குமா? பணத்தைக் கொடுத்து பொம்மையாக வாழ்வதை விட இது மேலல்லவா? இப்படியெல்லாம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்கள் கட்டாயமாகச் சிந்திக்க வேண்டும். தாங்கள் கேவலமாகச் சந்தைக்கு அழைத்துச் செல்லப்படுவதைத்தடுக்க வேண்டும்.

இரண்டு கைகளும் தட்டினால்தான் சத்தம் வரும். கொடுக்கல், வாங்கலும் அப்படித்தான். இதில் எந்த ஒன்று நிறுத்தப்பட்டாலும் சீதனம் ஒழிக்கப்படும். அனைவரினதும் புரிந்துணர்வே எல்லாவற்றிற்கும் அவசியமாகும். இதைப் புரிந்து கொண்டு சமுதாயம் முற்று முழுதாக அடிப்படையில் மாற்றமடைய வேண்டும். ஆணுக்குச் சமனாக பெண் உருவாகும்போது தன்னைத் தானே கவனித்துக் கொள்ள முடிகிறது. தனது முடிவை தானே எடுத்துக் கொள்ளும் சுதந்திரம் கிடைக்கிறது. இந் நிலையில் சீதனம் என்பதை இல்லாமல் செய்யலாம் அல்லவா?

தற்போது தாய்நாட்டில் நடந்து கொண்டிருக்கும் போராட்டங்களில் ஏற்பட்டுக் கொண்டிருக்கிற பாதிப்புகள் எண்ணிலடங்காதவை. எத்தனையோ பெண்கள் தமது பெற்றோரை இழந்தும், உடன் பிறந்தோரை இழந்தும் இன்று தாய்நாட்டில் அநாதரவாக நிற்கிறார்கள். தங்களை ஆண்கள் எனச் சொல்லிக் கொள்பவர்கள்தான் இவர்களுக்கான பதிலைத் தர வேண்டும்.



# வாசகர் கடிதங்கள்

இன்று இங்கு வாழும், நாளை தாய்நாட்டில் வாழப்போகும் பிள்ளைகளின் எதிர்காலத்தை பெற்றோர்கள் ஒருகணம் சிந்திக்க தங்கள் ஆக்கம் புத்துயிர் ஊட்டியுள்ளது.

இலங்கையில் மூன்று வருட காலமாக தனியார் பாலர் பாடசாலை ஒன்றை நடாத்தி வந்துள்ளேன். தொடர்ந்தும் அந்தப் பணியை இங்கே தொடர விரும்புகிறேன். எனவே எனது முகவரியைத் தூண்டிலில் பிரசுரிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சி. புவனேஸ்வரி

Mrs.Srithirukumar
Ahornstr 16
4134 Rheinberg 1
தொலைபேசி எண்: (02843) 80496



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அட்டையில் வெளியிடப்பட்டுள்ள கருத்துப்படம் என்னைக் கவர்ந்துள்ளது. ஜேர்மன் வாழ் தமிழ் மக்கள் மட்டுமல்ல உலகெங்கும் பரந்து வாழும் ஒவ்வொரு தமிழரும் இக் கருத்துப் படத்தை பார்வையிட வேண்டும். இது போல இன்னும் எம் மக்கள் மத்தியில் நடைபெறும் சம்பவங்களை கருத்துப் படம் மூலம் வெளிக்கொணர வேண்டும்.

பிலபீல்ட் வே. கணேசலிங்கம்

தை மாத இதழ் வாசித்தேன். பல விடயங்களை சுருக்கமாகவும், விளக்கமாகவும் குறிப்பிட்டிருப்பது பாராட்டிற்குரியது.

நோர்வே வி. சுரேந்திரன்

எடுத்த எடுப்பிலேயே சிந்திக்கவும், அட்டைப்படத்தை வைத்து இது தூண்டில்தான் என சொல்லவும் தூண்டுகிறது. அட்டைப்படத்தின் சிறப்புக்காக ரமணிக்கு எனது பாராட்டுதல்கள். கட்டுரைகள், கவிதைகள் மிக தரமானதாக இருக்கின்றன. செய்திப் பகுதி குறைக்கப்பட்டுவிட்டதாகப் பலர் குறைப்படினும் எனக்கு அது அளவானதாகத் தெரிகிறது.

கம் ஜி. எச். டயஸ்

பெற்றோரின் கவலையீனமும், பிள்ளைகளின் திண்டாட்டமும் என்ற விடயம் நல்ல விடயமாகும். பெற்றோர்கள் இதையெல்லாம். கவனத்தில் எடுப்பார்களா என்பதுதான் எனது கவலையும்.

நீகைம் நா. விஜயநாதன்

பெற்றோரின் கவலையீனமும் பிள்ளைகளின் திண்டாட்டமும் என்ற தலையங்கத்தின் கீழ் அமைந்த விளக்கமான செய்தி உங்களைப் பாராட்டத்தக்கதாகும்.

பாட்நொயஸ்ரட் யுவா

தூண்டிலில் வளர்ச்சிப் போக்கைக் காண முடிகிறது. ஆசிரிய தலையங்கம் நன்றாக இருந்தது. 'இரவல் பகுதி'யை இன்னும் கொஞ்சம் கூட்டினால் என்ன? 'கனவை மிதித்தவன்' தொடர்கதை இம்முறை தொடர்பில்லாதது போல் காணப்படுகிறது. அட்டைப் படம் நன்றாக இருந்தாலும் எளிமையாகிவிட்டது போலிருக்கிறது.

பிரான்ஸ் எஸ். மனோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அறியது நெஞ்சம்

உடுக்கு பாக்கியநாதன்

அதிகாலை ஆறு மணிக்கு கிறிங்..ங்..ங் என்ற பெரிய சத்தத்துடன் மணிக்கூடு தனது வேலையைக் கிரமமாகச் செய்தது. அலாரத்தின் சத்தத்தால் திடுக்கிட்டு விழித்த கோகிலா, அதற்குள் விடிந்து விட்டதே என்று நினைத்தவாறு கண்களைக் கசக்கி, சோம்பலை முறித்துக் கொண்டு எழுந்தாள்.

அருகில் துயின்று கொண்டிருந்த கணவன் மாதவனை "இஞ்சாருங்கொப்பா, நேரமாச்சு எழும்புங்கோ" எனஎழுப்பிவிட்டு தனது கடமைகளைச் செய்ய ஆயத்தமானாள். மாதவனோ மனைவியின் குரலைக் கேட்ட பின்பும் 'பத்து நிமிசம் இருக்குத்தானே, ஆறுதலா எழும்புவம்' என மறுபக்கம் புரண்டு படுத்தான்.

கோகிலா கணவன் வழமையாக வேலைக்குக் கொண்டு போகும் 'பாக்கிற்குள்' காலைச் சாப்பாடு, மதியச் சாப்பாடு என இரண்டாகப் பகுத்து 'பார்சல்' கட்டி வைத்தாள். சுடுதண்ணீர்ப் போத்தலில் நிறைய தேநீர் வார்த்து வைத்தாள். இன்னும் இடை நேரங்களில் சாப்பிடுவதற்கென அப்பிள், ஒறேஞ்ச் என்றும் போட்டு வைத்தாள். பின்னர் சுடச்சுட பாற்கோப்பி போட்டுக்கொண்டு போய் "இந்தாங்கோ" என்று கணவனிடம் கொடுக்க, அவனும் "ஆ அப்பாடா" எனக் வாங்கி அருந்திவிட்டு கொட்டாவி விட்டுக்கொண்டு எழுந்தான்.




"என் கண்மணி" எனக் கூறி அவளின் கன்னத்தில் கிள்ளி விட்டு விறு விறுவெனப் போய் பல் துலக்கி, முகம் கழுவி விட்டு "எங்கே லோங்ஸ்? எங்கே சப்பாத்து? சொக்ஸ்?" என இருந்த இடத்திலேயே கேட்க கோகிலாவும் ஓடியாடி எடுத்துக் கொடுத்து அவனை வேலைக்கு அனுப்பி விட்டு: வீட்டு வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினாள்.

மாதவன் தொலைக்காட்சிப் பெட்டி உற்பத்தி நிறுவனம் ஒன்றில் இரண்டு வருடங்களாக வேலை செய்து வருகிறான். ஓரளவுக்கு சரளமாக டொச்சில் கதைப்பான். நல்ல இனிதான இல்லற வாழ்க்கையின் ஆரம்பப்

www.tamilarangam.net

படியில் வாழ்ந்து வந்தான். ஓரளவு வசதியான குடும்பத்தில் பிறந்தவன் என்றபடியால் வீட்டுப் பிரச்சினைகள் அவ்வளவாகப் பாதிப்பதில்லை. அத்தி பூத்தது போல கடிதம், பணம் என்பன வீட்டுக்கு அனுப்புவான்.

கோகிலாவும் அவனுடைய எந்தச் செயலுக்கும் மறுப்புத் தெரிவிப்பதில்லை. தன் இலட்சியக் கணவன் அவன் என்று அவனைச் சந்தோசமாக வைத்திருப்பதே தனது வேலையென நினைத்து வாழ்ந்து வந்தாள்.

இளஞ்சோடிகள். திருமணமாகி மூன்று வருடங்கள்தான். கடவுள் ஏதோ வகையில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கவலையைக் கொடுப்பவர்தானே. அதே மாதிரி இவர்களுக்குக் குழந்தை இல்லாத கவலையைக் கொடுத்திருந்தான். ஆனாலும் அது பெரிதாக அவர்களுக்குத் தோன்றவில்லை. இளம் தம்பதிகள் என்றபடியால் திடீரெனக் குடும்பச் சுமையை ஏற்றிக் கொள்ள விரும்பவில்லை எனவும் சொல்லலாம். கோகிலாவுக்கு இது கவலைதான். ஆனால் காட்டிக் கொள்வதில்லை.

கணவன் வேலைக்குப் போய்விட, வீட்டிலே கோகிலா தனிமையிலேயே காலத்தைப் போக்கி, மாலையானதும் அவனை எதிர்பார்த்து மகிழ்ந்து உரையாடுவதுமாக வாழ்ந்தாள். தனியே இருக்கும்போது டொச் புத்தகங்களை வாசிப்பதில் அக்கறை செலுத்தினாள். மிகுதி நேரங்களில் ரி.வி பார்ப்பதும், இங்கு உருவாகும் தமிழ் சஞ்சிகைகளுக்கு ஆக்கங்கள் எழுதுவதுமாகப் பொழுது போக்கினாள்.

மாதவன் தொழிற்சாலையில் மற்றவர்களைக் கவரக் கூடிய முறையில் வேலை செய்தான். தக்க ஊதியமும் அவனுக்குக் கிடைத்தது. அவன் ஆசியன் என்ற காரணத்தினால் தொழிற்சாலை முதலாளி அவன் மேல் தனிப் பற்று வைத்திருந்தார். சில நேரங்களில் அவனைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று உரையாடுவதுமுண்டு. ஒருமுறை முதலாளி அவனிடம் மனைவியையும் கூட்டி வரும்படி சொன்னார். "அவவுக்கு டொச் தெரியாது. சில காலம் செல்லக் கூட்டிவருவேன்" என்று அவன் கூறியிருந்தான். முதலாளியின் மனைவி, மக்கள் கூட மாதவனில் அன்புடனும், அவனுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற ஆர்வத்துடனும் பழகி வந்தார்கள். மாதவன் தனது முதலாளி குடும்பம் பற்றியும், அவர்கள் காட்டும் பரிவு பற்றியும் கோகிலாவுக்கு அடிக்கடி சொல்வான். கணவனுக்குக் கிடைக்கும் மரியாதையை எண்ணி அவள் சந்தோசப்படுவாள்.

ஒருநாள் மாதவன் வேலை முடிந்து முதலாளியின் அழைப்பின் பேரில் அவருடைய வீட்டுக்குச் சென்றான். இதை முற்கூட்டியே கோகிலாவுக்கும் தெரிவித்திருந்தான்.

முதலாளியின் வீட்டுக்குப் போனபின்தான் அவருடைய கடைசி மகளின் பிறந்தநாள் என அறிந்தான். அங்கு முதலாளியின் உறவினர் பலர்

www.tamilarangam.net

வந்திருந்தனர். கொண்டாட்டத்திற்கு முதலாளியின் மனைவியினுடைய சகோதரியும் வந்திருந்தாள்.

பார்ப்பதற்கு அழகான தோற்றம். அவளுக்கு இன்னும் திருமணமாகவில்லை. வங்கியொன்றில் காசாளராக வேலை பார்க்கிறாள்.

'பேர்த் டே பார்ட்டி' ஆரம்பமாகி சிறப்பாக நடந்து கொண்டிருந்தது. உணவுகள், குடி வகைகள் எல்லோருக்கும் பரிமாறப்பட்டன. மாதவனுக்கு ஒரு புது அனுபவம்தான். அவன் குடிவகைகளை அறிந்திருக்கிறானே தவிர குடிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவனாக இதுவரை காலமும் வாழ்ந்தது கிடையாது. மேலால் ருசி பார்த்த நாட்களுமுண்டு.

அந்த பிறந்தநாள் கொண்டாட்டத்தில் குடிக்க வேண்டிய நிலையில் அவன் குடித்துவிட்டான். முதலாளி, அவரின் மனைவி, மனைவியின் சகோதரி மிலாணி எல்லோரும் நகைச்சுவையாகப் பேசி, கிளாசை வைப்பதும் தூக்குவதுமாக குடித்து மகிழ்ந்து கொண்டிருந்தனர். நேரம் போக வந்தவர்கள் மெல்ல மெல்ல விடைபெற்றுப் போனார்கள்.

இறுதியில் மாதவன் மட்டும்தான் இருந்தான். சிறிது நேரத்தின் பின் அவனும் போவதற்காக எழுந்தான். அதிகம் குடித்திருந்தபடியாலும், பழக்கம் குறைவு என்ற படியாலும் அவன் தள்ளாடினான். 'எப்படித்தான் குடித்தாலும் ஜேர்மன்காரன் நிதானமிழப்பது அருமை' எனத் தனக்குள் நினைத்துக் கொண்டான். அவனது தள்ளாட்டத்தைப் பார்த்த முதலாளி அவனுடைய நிலைமையைப் புரிந்து கொண்டார். மாதவனை வீட்டில் கொண்டு போய்விடும்படி மிலாணியைக் கேட்டுக் கொண்டார்.

மிலாணி மாதவனின் கையைப் பிடித்துக் கூட்டிக் கொண்டுபோய் காரின் முன் இருக்கையில் அமரவைத்தாள். சாரதி இருக்கையில் அமர்ந்து காரைச் செலுத்தினாள். அவளுக்குப் பாதை தெரியாத படியால் தூங்கிக்கொண்டிருந்த மாதவனைத் தட்டித் தட்டிப் பாதையைக் கேட்டுக் கொண்டே போனாள். அவன் அவளுக்கு தாறுமாறுகச் சொல்லிக் கொண்டிருந்ததால் அவளுக்குச் சிரமமாகவிருந்தது.

தற்செயலாக மிலாணியின் கண்களில் மாதவனின் சேட் பொக்கற்றிலிருந்த கடித உறை தென்பட்டது. அவள் அதை எடுக்கும்போது அவளுடைய கை மாதவனின் மார்பில் உராய்ந்தது. அப்போது அவன் 'கோகிலா' எனக் கூப்பிட்டு அவளை அணைத்தான். அவனிலிருந்து சிரமப்பட்டு தன்னை விடுவித்துக் கொண்ட மிலாணிகடித உறையில் எழுதப்பட்ட முகவரியைப் படித்து அவனுடைய முகவரியைத் தெரிந்து கொண்டு வீட்டில் கொண்டு போய் இறக்கிவிட்டாள்.

கோகிலா மாதவனை எதிர்பார்த்த வண்ணம் நித்திரை கொள்ளாதிருந்தாள். "நேரம் சென்று விட்டது. மன்னிக்கவும்" என மிலாணி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காரில் ஏறிச் செல்ல, மாதவன் வீட்டிற்குள் வந்தான். அவன் நடக்கும் விழப்போவதைக் கண்ட கோகிலா அவனைத் தாங்கிப் பிடித்துக் கொண்டாள். கூட்டிக் கொண்டு போய் படுக்க வைத்தாள். அவனது சப்பாத்துகளைக் கழற்றிவிட்டு தானும் சரிந்து கொண்டாள். அன்றுதான் அவள் கண்களில் நீர் முட்டி வழிய ஆரம்பித்தது. சிந்தனைகள், கற்பனைகள் எல்லாம் சிதறிப் போயின.

மறுநாள் மாதவன் வேலைக்குப் போவதற்கு முன் முதல் நாள் பிறந்த நாள்விழாக் கொண்டாட்டத்தில் நடந்தவற்றைக் கூறினன்.

"என்ன செய்வது? அவர்கள் தருவதைக் குடிக்க வேண்டிய கட்டாயம். நான் குடிக்க மறுத்தால் நாகரிகமற்றவன் என்று நினைப்பார்கள். அவர்கள் உண்டு, குடித்து மகிழும்போது நான் அதில் பங்குபற்றாமல் விடுவது சரியா? சேர்ந்து ஒத்துழைப்பதுதானே நாகரிகம். உமக்கும் தெரியும் தானே. அதனால்தான் குடித்தேன். இனிமேல் இப்படிக் குடிக்க மாட்டேன். உமது முகமே வாடிவிட்டது. உமக்கு விருப்பம் இல்லாதவற்றை இனிமேல் நான் செய்ய மாட்டேன். சும்மாதானே குடிச்சனன். குடியில ஆசைப்பட்ட? நீர் கவலைப்படக் கூடாது." என மாதவன் அவளைத் தேற்றினன். கோகிலாவும் திருப்தியடைந்தாள். முதலாளி இனிமேல் கேட்டால் தனக்கு ஒத்துவரவில்லை எனச் சொல்லிவிடுவதாகவும் மாதவன் அவளுக்கு கூறினன்.

சொன்னது போலவே மாதவன் குடிக்காமலிருந்தான். தன்மீது அவன் காட்டும் அன்பு, மரியாதையை எண்ணி கோகிலாஉருகிப் போனுள்.

மாலை நேரங்களில் மாதவனுடன் கதைப்பதற்காக மிலாணி தொழிற்சாலைக்கு வரத் தொடங்கினுள். மாதவனும் வீட்டிற்குப் போவதற்கு முன் அவளுடன் கதைத்து மகிழ்வான்.

ஒருநாள் மாலை மாதவன் மிலாணியை தனது வீட்டிற்கு கூட்டிக் கொண்டு போனுன். தனது தொழிற்சாலையில் வேலை செய்பவள் என்று அவளை மனைவிக்கு அறிமுகப்படுத்தினன். கணவனுடன் வேலை செய்பவள் என்ற மரியாதையுடன் கோகிலா மிலாணியை உபசரித்தாள். டொச்சில் அவளுடன் உரையாடினுள்.

மாதவனின் கதிரைக்குப் பக்கத்திலேயே மிலாணி அமர்ந்து கொண்டு அவனது முதுகில் தட்டுவதும், கையைப் பிடிப்பதுமாக குறும்புகளுடன் கதைத்துக் கொண்டிருந்தாள். மாதவனுக்குச் சங்கடமாக இருந்தது. கோகிலாவுக்கும் ஏதோ மாதிரி இருந்தது.

"ஜேர்மன் பெண்கள் இப்படித்தான். சரி சமமாகப் பழகுவார்கள். ஆண்கள் என்று வெட்கப்பட மாட்டார்கள்" என்று மிலாணி போன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பின் மாதவன் கோகிலாவை சமாதானப்படுத்தினான். கணவன் மேல் வைத்திருக்கும் அன்பு, நம்பிக்கை என்பவற்றால் கோகிலா அவனைத் தவறாக எடை போடவில்லை.

அதன் பின் மிலானி தொடர்ந்து அவர்கள் வீட்டுக்கு வந்து உரையாடி, இலங்கைச் சாப்பாடு என்று சாப்பிடத் தொடங்கினாள். கோகிலா அதைப் பற்றி கொஞ்சமும் சந்தேகப்படவில்லை. சில நாட்களில் அவள் மிலானியின் சிநேகிதியாகிவிட்டாள். ஒரு நாள் கோகிலா மிலானியிடம் தனக்கு ஒரு வேலை எடுத்துத் தர முடியுமா? என்று கேட்டாள். "வீட்டில தனிய இருக்கப் பொழுது போகுதில்லை. குழந்தைகளும் இல்லை. வேலை செய்தால் நல்லது என்று நினைக்கிறேன்" என்று காரணம் சொன்னாள். தன்னுடைய சகோதரன் வைத்திருக்கும் 'ரெஸ்ரோரன்டில்' வேலை வாங்கித் தருவதாக மிலானி உறுதியளித்தாள்.

வேலைக்குப் போக விரும்பும் தனது எண்ணத்தை மாதவனுக்கு தெரிவித்தாள் கோகிலா. "நல்லது. உமது பொழுது போக்குக்காவது நல்லது" என்று அவன் சம்மதித்தான்.

இரண்டு மாதங்களின் இறுதியில் கோகிலா 'ரெஸ்ரோரன்டில்' வேலைக்கு அமர்த்தப்பட்டாள். காலையில் மாதவனும், கோகிலாவும் ஒன்றாகவே வேலைக்குக் கிளம்புவார்கள். வேலைக்குப் போவது கோகிலாவுக்குத் திருப்தியாக இருந்தது. தான் வேலைக்குப் போனாலும் தனது கணவனுக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளை அவள் தவிர்க்கவில்லை. இருவரும் உழைத்ததனால் பணமும் சேர்ந்தது. எதிர்கால வாழ்க்கையை சந்தோசமாக அமைக்கலாம் என்று அவள் கற்பனை பண்ணினாள்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோகிலா வேலை செய்யும் ரெஸ்ரோரரண்டின் ஒரு வருடப் பூர்த்தியை முன்னிட்டு ஒரு கொண்டாட்டம் நடைபெறும் என ஒரு மாதத்திற்கு முன்பே அறிவிக்கப்பட்டு ஆயத்தங்கள் செய்யப்பட்டன. கொண்டாட்டத்திற்கு ஒரு கிழமைக்கு முன் அங்கு வேலை செய்வோருக்கு மேலதிக வேலை இரவு பத்து மணிவரை கொடுக்கப்பட்டது.

அந்த ரெஸ்ரோரரண்டில் கோகிலாவுடன் வேறு பெண்களும் வேலை செய்தார்கள். அவர்கள் களைத்திருக்கும்போது பியர், வைன் என்பன இலவசமாகக் கொடுக்கப்பட்டன. ஒரு நாள் கோகிலா நன்றாக களைத்திருந்தபோது அவளுடன் வேலை செய்யும் பெண் ஒருத்தி அவளிடம் வைனை நீட்டினாள். "குடித்தால் களைப்பெல்லாம் போய்விடும்" என்று ஆலோசனை கூறினாள்.

கோகிலா முதலில் மறுத்துவிட்டாள். அப்போது அவள் கணவன் "நாகரிகமில்லை என்று நினைப்பார்கள். தரும்போது மறுக்காமல் குடிக்க வேணும். அதுதான் நானும் குடித்தேன். அவர்களுடன் சேர்ந்து நடக்க வேண்டும்" என்று ஒருநாள் அவளுக்கு சொன்னதை நினைத்துக் கொண்டாள். அதன் பின் மறுக்காது வைனை வாங்கிக் குடித்தாள். புதுப் பழக்கமாதலால் அவளால் தொடர்ந்து வேலை செய்ய முடியவில்லை. அவளுடைய நிலமையைப் பார்த்த சக வேலையாள் பிலிப் தன்னுடைய காரில் ஏற்றி அவளை வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போனார்.

மனைவியை எதிர்பார்த்துக் காத்திருந்த மாதவன் அவளைக் கொண்டு வந்து இறக்கிவிட்ட பிலிப்புக்கு நன்றி கூறி அனுப்பி வைத்தான். "நீங்கள் சாப்பிட்டு விட்டீர்களா? எனக்கு களைப்பாய் இருக்கிறது" என்று கோகிலா போய் படுத்துவிட்டாள். சாப்பிட்டபின் படுக்கைக்கு வந்த மாதவன் கோகிலாவிடமிருந்து மது வாடை அடிப்பதை உணர்ந்து அதிர்ச்சியடைந்தான். உடனே அவளை உலுப்பி விசாரித்தான். கோகிலா நடந்ததை சொன்னாள். மாதவனுக்கு கோபமும், வெறுப்பாகவும் இருந்தது. என்றாலும் பேசாமல் படுத்துக் கொண்டான்.

மறுநாள் காலையில் இருவரும் கதைக்காமலேயே வேலைக்குப் போனார்கள். இரவு வேலையால் வந்ததும் மாதவன் துள்ளிக் குதித்தான்.

"இரவு என்ன களைப்பு?"

"நீங்கள்தான் சொன்னீர்கள் நாகரிகமில்லையென்று. அதனால் நான் மருந்து போல குடித்தேன்" — கோகிலா.

மாதவனுக்கு ஆத்திரம். பொத்துக்கொண்டு வர காலால் உதைந்தான். கோகிலா தடுமாறி விழுந்தாள்.

"உன்னை யார் குடிக்கச் சொன்னது?" — மாதவன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நீங்கள்தான் சொன்னீர்கள்" - கோகிலா.

"குடிக்கச் சொல்லியா?"

"தருவதை மறக்கப்படாது என்று..."

கோகிலா சொல்லி முடிப்பதற்கு முன் அவள் கன்னத்தில் பளார் என்று ஒரு அடி. "நீ இனி வேலைக்குப் போகவேண்டாம். போகக் கூடாது" என்று மாதவன் கத்தினன்.

"அதெப்படி உடனே நிற்பது. முதலாளிக்குச் சொல்லிப் போட்டுத் தான் நிற்கலாம்" கோகிலா கன்னத்தை தடவியபடி சொன்னாள். "ஏன் வேலைக்குப் போகக் கூடாது?" என்று கேட்டாள்.

"ஏன் குடிக்கலா?" மாதவன் கோபத்தில் வெடித்தான்.

"நீங்கள் குடிக்கேக்க பிழையில்லை. எனக்கு அந்த நிலமை வந்து நான் குடித்தால் பிழை. வேலைக்குப் போகக் கூடாது. சரி இப்ப வர ப்போற ஆண்டுவிழாவோட நான் வேலைக்குப் போவதை நிறுத்துகிறேன்."

ஆண்டு விழா வந்தது. கோகிலா மாதவனையும் கூட்டிக் கொண்டு ரெஸ்ரோரண்டுக்குப் போனாள். இசை நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது.

கோகிலா உள்ளே சாப்பாடு தயாரிக்கப்படும் இடத்தில் ஓய்வி ல்லாமல் வேலை செய்து கொண்டிருந்தாள்.

முன்பகுதியிலிருந்து இசையை ரசித்துக் கொண்டிருந்த மாதவன் தாகம் எடுக்க கோகிலாவைத் தேடிக் கொண்டு உள்ளே போனான். அங்கே பிலிப் கோகிலாவின் முதுகில் தட்டி, தோளில் தட்டி அதை எடு, இதைச் செய்து என்று சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருந்தான்.

கொஞ்ச நேரம் அப்படியே நின்று அவர்களைக் கவனித்துக் கொண்டிருந்த மாதவனால் பொறுக்க முடியவில்லை. தன்னை மறந்து கோகிலா என உரத்துக் கத்தினான். கோகிலா ஆச்சரியத்துடன் திரும்பினாள்.

அவளை நெருங்கிய மாதவன் "சரசமாடவா இங்கு வந்தாய்? என்று கேட்டான். கோகிலா வாயடைத்துப் போனாள். 'என்னையா? என் கணவரா இப்படிக் கேட்பது?' அவள் உள்ளம் நொறுங்கியது. மாதவன் அந்த இடத்தை விட்டுப் போய்விட்டான்.

கோகிலா வேதனையுடன் தனது வேலையை முடித்துக் கொண்டு மாதவனைத் தேடினாள். அவன் அப்போதே போய்விட்டதாக சக வேலை யாள் ஒருவர் தெரிவித்தார்.

கோகிலா வீட்டுக்கு வந்தாள். மாதவன் அங்கு இல்லை. சிறிது நேரம் கழித்து வந்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"உனக்கு வெட்கமில்லை. அவனோடு முட்டிக் கொண்டு வேலை செய்ய? நீயும் அதற்கு ஒப்புக் கொண்டாயா? என்னைவிட அவனது அழகு உனக்குப் பிடித்துவிட்டதா?" என்று பொரிந்தான்.

கோகிலா என்ன சொல்வதென்று தெரியாமல் தலையில் கை வைத்தாள். 'சீ இந்த ஆண்களே சுயநலவாதிகள். சந்தேகக்காரர்கள். தான் எந்தப் பெண்ணுடனும் பழகலாம். அவள் கையைப் பிடிக்கலாம். அதை மனைவி பொறுக்க வேண்டும். வெறும் நட்புதான் என்று மனைவி நினைக்க வேண்டும். சந்தேகம் கொள்ளக் கூடாது. விசாரிக்கக் கூடாது. அவன் கூட்டிவரும் பெண்களுக்கு மரியாதை கொடுத்து மனைவி வரவேற்க வேண்டும். இதுதான் ஆண்களின் நோக்கம்.'

'ஆனால் ஒரு பெண் வேலைக்குப் போய், வேலை செய்யும் இடத்தில் ஆண்களுடன் பழக்கம் ஏற்பட்டால் அவள் அவனைக் கணவனாக அடைய ஆசைப்படுகிறாள் என்று அர்த்தம் கொள்கிறார்கள். சந்தேகத்துடன் நேரடியாக விசாரிக்கிறார்கள். ஆணின் கை தெரியாமல் பட்டாலும் பெண் அதை வலிந்து செய்ததாகவே கணவன் நினைக்கிறான். தனக்கு பெண்களின் நட்பு ஏற்படுவது போல மனைவிக்கும் வேலை செய்யும் இடத்தில் ஆண்களின் நட்பு, பழக்கம் ஏற்படும்தானே என சகித்துக் கொள்ளும் மனப்பக்குவம் புரிந்துணர்வு, பொது அறிவு ஆண்களுக்கு இல்லையா' என கோகிலா தன் மனதுக்குள்ளேயே குமுறினாள்.

'எவ்வளவோ நம்பிய என்னை இவர் இப்படி சந்தேகப்பட்டார் என்றால் இனியும் இவருடன் வாழ்வது போலிதான். கணவன் மனைவிக்குள் சச்சரவு இருக்கலாம். ஆனால் சந்தேகம் இருக்கக் கூடாது. குடும்பம் எனும் இலையை அரித்துத் தின்னும் புழுப் போன்றது சந்தேகம் என்று அவள் மன வேதனைப்பட்டாள். தனது வாழ்க்கைய இந்த அத்திவாரத்தில் அமைக்க முடியாது என்று எண்ணினாள்.


'மிலானி என்ற பெண்ணுடன் என் மனதுக்குப் பிடிக்காத மாதிரி அவர் நடந்து கொண்டார். அதை நான் தப்பாக எண்ணவில்லையே. அவரில் எனக்கு அசையாத நம்பிக்கை இருந்த போது நான் சந்தேகப்பட அவசியமே இல்லை. அப்படியிருக்க என்னில் நம்பிக்கையுள்ள கணவன் எப்படி என்னில் சந்தேகப்பட முடியும்? பணம் தொழில், குடும்பம் என்று வேலைக்குப் போனேன். இப்படி உருவாகும் என்று நினைக்கவில்லையே. பணம் இனி எனக்கு எதற்கு? இப்படி வரும் என்று முன்கூட்டியே அறிந்துதான் கடவுள் எமக்குப் பிள்ளைப் பாக்கியத்தைக் கொடுக்கவில்லை.' என்று பலவாறு சிந்தித்தபின் வீட்டை விட்டு வெளியேறினாள் கோகிலா.

இந்த உலகத்தில் ஒரு பெண்ணுக்கு தன்னம்பிக்கை, துணிவு இருக்குமேயானால் தனித்து வாழலாம் என்ற எண்ணமுடைய புரட்சிப் பெண் இவள். இவளது மனப்பான்மைக்கு ஊன்றுகோலாக இனி ஒரு ஆண்மகன் அவள் வாழ்வில் சந்திக்கலாம். விடலாம். அது அவளின் மனோபாவத்தைப் பொறுத்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




வீரகேசரி செய்திகள்

28.2.88

முல்லைத்தீவில் இந்திய சமாதானப் படையினருக்கு மீன் விநியோகம் செய்துவந்த ஒருவரும், யாழ் பொலிஸ் நிலையத்தில் கடமைபுரிந்த இளவாலையைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும், தெல்லிப்பழையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரும் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப் பட்டனர்.

"இலங்கையின் சிறுபான்மையினமான தமிழர்களின் விடுதலைக்காகப் போராடிய போராளிக் குழுக்கள் தாம் எந்தவொரு நாட்டு இராணுவத்துடனும் போர் செய்யும் வல்லமை படைத்தவர்கள் என்பதை உலகின் கண்களுக்கு அமைதியை நிலைநிறுத்துவதற்காக இலங்கை வந்த எங்களுடன் யுத்தம் செய்ததைக் கொண்டு பகிரங்கமாக காட்டிவிட்டனர். இன்னும் ஏன் யுத்தம் செய்து மனித உயிர் அழிவுகளை ஏற்படுத்த வேண்டும்" —இந்தியப் படைகளின் அம்பாறை மாவட்ட பிரிகேடியர்!

23.2.88ல் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வைத்து ஜேர்மன் செல்லவிருந்த 5 தமிழ் வாலிபர்கள் போலி விசா முத்திரை பதித்த கடவுச்சீட்டுக்கள் வைத்திருந்ததாக பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர்.

தம்மை விடுதலை செய்யவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கொழும்பு மகசீன் சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் சுழற்சிமுறை உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர்.

29.2.88

"இலங்கையில் உள்ள இந்தியப்படைகள் தற்போது விலக்கிக் கொள்ளப்படமாட்டாது" —இந்திய பாதுகாப்பு மந்திரி.

தமிழ் நாட்டிலிருந்து மேலும் 549 அகதிகள் தலைமன்னார் திரும்பினர். இவர்களையும் சேர்த்து இதுவரை 3000த்தும் மேற்பட்டோர் இலங்கைக்குத் திரும்பியுள்ளனர்.

இந்திய பாஸ்போர்ட் பெற்ற தோட்டங்களிலுள்ள தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகங்களினால் எந்த நேரத்திலும் இந்தியா திரும்ப தயாராக இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

1.3.88

அன்னையர் முன்னணியுடன் தமிழீழ விடுதலைப்புலிகளும் இந்திய அரசாங்கமும் பேச்சுவார்த்தை நடத்தி வருவதால் சுமுகமான ஒரு திருப்பம் ஏற்படுவதை எதிர்பார்த்து உண்ணாவிரதம் இருக்கும் இருதாய்மாருக்கும் உப்புக்கலந்த குளுக்கோஸ் ஊட்டப்பட்டது.

www.tamilarangam.net

பேராதனைப் பல்கலைக்கழகம் 30.2.88 முதல் மூடப்பட்டுள்ளது. அங்கிருந்த மாணவர்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டதுடன் பரீட்சைகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணி என்ற பெயரில் புதிய முஸ்லீம் அரசியல் கட்சியொன்று உதயமாகியுள்ளது.

சம்பள உயர்வுக் கோரிக்கையை முன்வைத்து இலங்கை மக்கள் வங்கி ஊழியர்கள் சட்டப்படி வேலைசெய்யும் ஒத்துழையாமை இயக்கத்தை நடாத்தி வருகின்றனர்.

2.3.88
வடக்கு கிழக்கு உட்பட 5 மாகாண சபைகளுக்கான தேர்தல் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியிலுள்ள பத்திரிகை அலுவலகம் 29.2.88 இல் இனந்தெரியாதோரால் குண்டுவீசித் தகர்க்கப்பட்டுள்ளது. அச்சு இயந்திரங்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

மட்டக்களப்பில் அன்னையர் முன்னணியினர் நடாத்திவரும் உண்ணாவிரதப் போராட்டத்தில் திருமதி அன்னம்மா டேவிட் தொடர்ந்தும் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

திருமலை சிவன் கோவிலில் இந்தியப் படையினர் முகாம் அமைத்துள்ளனர்.

3.3.88
ஒறுவல இராணுவ முகாமில் 7 இராணுவத்தினர் சக இராணுவ வீரர் ஒருவரினால் சுட்டுக் கொல்லப்பட்டனர். 9 பேர் காயமடைந்தனர்.

மன்னார் மாவட்ட ஜிகாத் இயக்க அமைப்பாளரும் இன்னுமொருவரும் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சம்மாந்துறையில் 3 ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

வவுனியா கூழாங்குளம்பகுதிக்கு இந்தியபடையினர் ஹெலியில் சென்று இறங்கியபின் 3 கல்வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டு 14குடிசைவீடுகள் எரிக்கப்பட்டன.

மட்டக்களப்பு அன்னையர்முன்னணியின் சாகும்வரையிலான உண்ணாவிரதத்திற்கு மாணவர்கள்ஊர்வலங்கள் நடாத்தி ஆதரவு தெரிவித்துவருகின்றனர்.

வாழைச்சேனையில் இடம்பெற்ற இயக்க மோதல்களில் 5 வாலிபர்கள் கொல்லப்பட்டனர்.

4.3.88.
கோப்பாயில் ரெலோ உறுப்பினர் ஒருவரும் இளவாலையில் முன்னாள் விவசாயப்படை அதிகாரி ஒருவரும் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

மட்டக்களப்பில் தலைதுண்டிக்கப்பட்ட நிலையில் 2 சடலங்கள் பிரதான வீதியில் காணப்பட்டன. இந்திய இராணுவத்துடன் தொடர்பு வைத்திருந்தார் என்ற குற்றச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாட்டின் பெயரிலேயே இவர்கள் இருவரும் கொல்லப்பட்டனர்.

இந்தியப்படையினருக்கு உதவியளித்த குற்றச்சாட்டின் சுழிபுரத்தைச் சேர்ந்த முதிய வர் ஒருவர் இனம் தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

6.3.88

வடக்கு, கிழக்கு நிலைமைகள் சுமுகமாகாததால் இணைந்த மாகாண சபைக்கு கடைசியாகவே தேர்தல் நடத்தப்படுமென்று ஜே.ஆர். தெரிவித்துள்ளார்.

யாழ் குடாநாட்டில் இந்திய இராணுவத்தினரின் திடீர் தேடுதல் நடவடிக்கைகள் மீண்டும் முடுக்கி விடப்பட்டுள்ளன. தேடுதல் நடவடிக்கைகளுக்கென சம்பந்தப்பட்ட பகுதிகளில் திடீர் ஊரடங்கு பிறப்பிக்கப்படுகின்றது.

வவுனியா சேமமடு பகுதிகளில் இந்திய இராணுவத்தினர் கெலிமூலம் நடாத்திய தேடுதலில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் கைகள் கட்டப்பட்ட நிலையில் முகாம்களுக்கு அழைத்துச்செல்லப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் விவசாயத்திலீடுபட்டுள்ளவர்களே.

இலங்கை இனப்பிரச்சினைத்தீர்வுக்கு புலிகளும் இந்தியாவும் பேசவேண்டும்
– ஜெயலலிதா.

7.3.88.

மட்டக்களப்பில் நடைபெறும் உண்ணாவிரதத்திற்கு ஒரு வாரத்திற்குள் நல்ல முடிவு இல்லையேல் வடக்கிலும் உண்ணாவிரதம் ஆரம்பிக்க யாழ் அன்னையர் முன்னணியினர் தயாராகி வருகின்றனர். உண்ணாவிரதம் இருந்துவரும் அன்னம்மா டேவிட் 16 வது நாளன்று இரத்தம் கக்குகிறார். அவரது நிலைகண்டு கூடியிருந்த பெண்கள் கண்ணீர் வடித்தனர்.

யாழ்ப்பாணத்திற்கு பொருட்களை ஏற்றிச் செல்லும் லொறிகளை கடத்திச்செல்வது தொடர்கிறது.

யாழ் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நாவற்குழி வீடமைப்பு திட்டத்தில் வேலைசெய்துவந்த 19 ஊழியர்கள் திடீர் வேலைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

8.3.88

இந்திய அமைதிப் படையினர் யாழ் குடாநாட்டில் பெற்றோல் நிலையங்களை சீல் வைத்ததால் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பெற்றோல் விநியோகிஸ்தர்கள் ஒரு கோஷ்டியினரால் பயமுறுத்தப்பட்டதே காரணம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

காத்தான்குடி முன்னாள் பட்டினசபைத் தலைவரும், காத்தான்குடி முஸ்லீம்பள்ளிவாசல்கள் சம்மேளனத் தலைவருமான அகமட் லெப்பை 6.3.88இல் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்திய இராணுவத்தினர் நெடுந்தீவில் தீவிர தேடுதல் நடத்தியபோது பலர் கைதுசெய்யப்பட்டு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஈழநாடு செய்திகள் (26.2.88)

சமாதானத்தை ஏற்கும் தீவிரவாதிகளுக்கு பொதுமன்னிப்பு. தேர்தலிலும் போட்டியிடலாம்." —பாராளுமன்றத்தில் ஜே.ஆர்.

வடக்குக்கிழக்கு மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிடும் ஐ.தே.கட்சியை எதிர்த்து ஈ.பி.ஆர்.எல்.எவ் மட்டுமே போட்டியிடும் எனஎதிர்பார்க்கப்படுகிறது. வடக்குக் கிழக்கில் 7 மாவட்டங்களிலிருந்து 57 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

27.2.88

தமிழ் இளைஞர்கள் தடுப்புக்காவலில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை கண்டித்து மலையகத்து இளைஞர்கள்உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளனர்.

பிலியந்தலவில் இலங்கையின் முதல் எய்ட்ஸ் நோயாளி காலமானார்.

28.2.88

இலங்கைத் தலைவர்கள்—விடுதலைப் புலிகள் இரகசியப் பேச்சுவார்த்தை குறித்து இந்திய அரசு அதிர்ச்சி தெரிவித்துள்ளது. இந்த செய்தி உண்மையானால் இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் சேர்ந்து இந்தியப் படையை திரும்ப வேண்டும் என்று கோரும் எந்த முடிவையும் இந்தியா ஏற்றுக்கொள்ளாது என்றும் கூறப்பட்டுள்ளது.

வீரகேசரிச் செய்திகள்

11.03.88

உண்ணாவிரதமிருந்துவரும் அன்னம்மா டேவிட்டை பார்வையிட இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த டாக்டர்களை அனுமதிக்க விரும்புவதாக அன்னையர் முன்னணியினர் தெரிவித்துள்ளனர்.

சென்னையில் தங்கியுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் விரைவில் நாடு திரும்பத் திட்டமிட்டுள்ளனர். விடுதலைப்புலிகள் இயக்கம் வன்முறையைக் கைவிட்டு ஜனநாயக வழியில் திரும்ப வேண்டுமென த.வி.கூ அரசியல் குழு கோரியுள்ளது.

யாழ் குடாநாட்டிலுள்ள எரிபொருள் நிலையங்கள் தொடர்ந்தும் பூட்டப்பட்டுள்ளதால் பஸ் கட்டணங்கள் அதிகரித்துள்ளன.

12.03.88

யாழ்நகரில் முன்னர் அகற்றப்பட்ட இடங்களில் இந்தியப்படைகள் மீண்டும் சென்றிகள் அமைத்துள்ளன. திடீர் தேடுதல் நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன. பொதுமக்கள் சந்திகளில் பலமணி நேரம் நிற்கவைக்கப்படுகிறார்கள்.

13.03.88

நாட்டில் அமைதியும், சமாதானமும் ஏற்படும் வரை மூடப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களை திறக்க முடியாதென பல்கலைக்கழக உபவேந்தர் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளார்.

www.tamilarangam.net

15.3.88
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் பூசா, மகசீன் ஆகிய சிறைகளில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ள 986 இளைஞர்களில் பெரும்பாலானோர் "சமாதான ஒப்பந்தத்தை ஏற்கிறோம். எம்மை விடுதலை செய்ய ஏற்பாடு செய்யுங்கள்" என்று கோரும் கடிதங்களை சிறைச்சாலை அதிகாரிகளினூடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

மட்டக்களப்பில் 14.3.ல் நடந்த பேரணி இந்திய அமைதிப்படையினரால் கலைக்கப்பட்டது. பேரணியில் வந்த சுமார் 5000 பேரைக்கலைக்கப் படையினர் எச்சரிக்கைத் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை. மட்டக்களப்பு மாவட்ட தொழிற்சங்க சம்மேளனம், தமிழ் மாணவர் ஒன்றியம், பிரஜைகள் குழு என்பன திருமதி அன்னம்மா டேவிட்டுக்கு ஆதரவாக இப்பேரணியை ஒழுங்கு செய்திருந்தன.

மட்டுநகர் அன்னையர்முன்னணியினரின் உண்ணாவிரதத்திற்கு ஆதரவாக கல்முனையில் நான்கு மாணவர்கள் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு உண்ணாவிரதம் அனுஸ்டிக்கின்றனர். இவர்கள் உண்ணாவிரதத்தை முடித்துக் கொள்ளும்போது மேலும் நால்வர் உண்ணாவிரதத்தைத் தொடருவர்.

இராமேஸ்வரம் கரைக்கு அப்பால் மூன்று ஏ.கே 47 ரைபிள்களும் மூவாயிரம் கிலோ வெடிமருந்தும் கொண்ட வள்ளம் ஒன்று 12.3.88 அன்று இந்திய கடற்படையினரால் கைப்பற்றப்பட்டதாக இந்திய வானொலி 14.3.88 அன்று அறிவித்தது.

"மக்களால் தெரிவு செய்யப்பட்ட என்னை ஆயுதங்களால் விரட்டியடிக்க முடியாது"—ஜே.ஆர்.

16.3.88
திருமலை மாவட்டத்தில் கிருலகடவல என்ற இடத்தில் வயல்வெளியில் நின்ற மூவர் உட்பட ஏழுபேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்கள் பெரும்பான்மை இனத்தவராவர். தம்பலகாமத்தில் 15.3.88அன்று காலை பஸ் ஒன்றில் பயணம் செய்த 13 பயணிகள் கொல்லப்பட்டனர். இவர்கள் தமிழராவர்.

கந்தளாய் கல்மெட்டியாய என்ற கிராமத்தின் மீது ஆயுதம் தாங்கிய விடுதலைப் புலிகள் இயக்கம் 14.3.88அன்று மாலை தாக்கியதில் 12 சிங்கள கிராமவாசிகள் கொல்லப்பட்டனர். 2பேர் காயமடைந்தனர் என திருமலை இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

17.3.88
மட்டுநகரில் உண்ணாவிரதம் இருந்துவரும் திருமதி அன்னம்மா டேவிட்டின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புதல்விகள் இருவர் இந்திய இராணுவத்திடம் முறைப்பாட்டு மகஜர் ஒன்றைக் கையளித்ததாக தெரிவிக்கப்பட்டதையடுத்து அன்னையர் முன்னணியினரின் தலைவி திருமதி வெ.சுவேந்திராதேவி, அதன் போஷகர் திரு கிங்ஸ்லி இராசநாயகம் ஆகியோர் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். திருமதி அன்னம்மா டேவிட்டும் இந்தியப்படையினரால் சிகிச்சைக்கென கொண்டு செல்லப்பட்டார்.

18.3.88
யுத்த நிறுத்தம் செய்யுமாறும் விடுதலைப்புலிகளை பேச்சுக்கு அழைக்குமாறும் கோரி திருமலையில் சுழற்சிமுறை உண்ணாவிரதம் அனுஸ்டித்துவரும் திருமலை அன்னையர் முன்னணியினர் தமது கோரிக்கைகளுக்கு ஒரு வார காலத்தில் பதிலின்றேல் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக தெரிவித்துள்ளனர்.

திருமலை மாவட்டத்தில் காளியங்களவ புஹார் என்ற முஸ்லீம் கிராமம் 15.3.88 அன்று இரவு ஆயுதம்தாங்கிய 25 தீவிரவாதிகளால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

மட்டுநகரில் 58 வயதான திருமதி அன்னம்மா டேவிட் கடந்த 25தினங்களாக அனுஸ்டித்துவந்த உண்ணாவிரதம் 16.3.88 புதன்கிழமை திடீரென முற்றுப்பெற்றது. உண்ணாவிரதம் அனுஸ்டித்த இடத்திலிருந்து அன்னம்மாவைத் தூக்கிச் சென்ற இந்திய அமைதிப் படையினர் அவருக்கு முகாமில் வைத்து சிகிச்சை செய்துவருகின்றனர்.

19.3.88
அம்பாறை மாவட்டத்திலுள்ள தீகவாபிய என்னும் இடத்தில் 13 சிங்களக் குடிமக்கள் கத்திகளால் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர். 18 பேர் காயங்களுடன் உயிர்தப்பியுள்ளனர். 17.3.88அன்று இங்கு சென்ற இளைஞர் கோஸ்டியொன்று இப்படுகொலைகளைப் புரிந்திருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

20.3.88
அம்பாறை மாவட்டத்தில் கல்வாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவில் உள்ள செட்டிப்பாளையம் என்ற இடத்தில்வைத்து புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 11 பேர் அமைதிப்படையினரால் கைதுசெய்யப்பட்டனர். புலிகள் இயக்க அம்பாறைமாவட்ட அரசியல் பிரிவு முக்கியஸ்தர்களான ரமணு, கலா இராணுவப்பிரிவைச் சேர்ந்த குட்டி ஆகியோரே கைதுசெய்யப்பட்ட முக்கியஸ்தர்களாவர்.

www.tamilarangam.net

21.3.88

மாத்தறையிலுள்ள ருகுணு பல்கலைக்கழகத்திலிருந்து ஆயுதங்கள், வெடிமருந்துகள், சீருடைகள் என்பவற்றை படையினர் கைப்பற்றியுள்ளனர். இதேவேளையில் மலையகத்தில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்ததாக நம்பப்படும் தாக்குதல் திட்டமொன்றையும் படையினர் முறியடித்துள்ளனர்.

பூஸா, மகசீன் சிறைகளில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு அவர்களின் கையெழுத்துக்காக சத்தியக் கடதாசிகள் வழங்கப்பட்டுவருவதாக அறியப்படுகிறது. இவர்கள் மன்னிப்பும் விடுதலையும் வழங்கக் கோரி ஜனாதிபதிக்கு கடிதங்கள் அனுப்பியதைத் தொடர்ந்தே சத்தியக்கடதாசிகள் வழங்கப்படுவதாகத் தெரிகிறது.

நிந்தவூர் ஊர்ப்பிரமுகர் 7 பேர் 19.3.88அன்றுகாலை ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் சிலரால் கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

22.3.88

த.வி.கூட்டணி கிழக்குமாகாணத் தலைவர்களில் ஒருவரான திரு ஆ.வேல்முருகு படுகொலை செய்யப்பட்டதையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கல்முனை, பாண்டிருப்பு, காரைதீவு ஆகிய பகுதிகளில் 21.3.88அன்றுகாலை ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பள உயர்வுக் கோரிக்கையை முன்வைத்து பண்டாரவளை, அப்புத்தளை பகுதியிலுள்ள 17 தனியார் தோட்டங்களைச் சேர்ந்த 1200 தோட்டத் தொழிலாளர்கள் 21.3.88அன்று ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் ஒன்றை மேற்கொண்டனர்.

திருமலை மாவட்டத்தில் பன்குளத்திலிருந்து திருமலை நோக்கிச் சென்ற பயணிகள் வான் ஒன்றின்மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருபயணி உயிரிழந்தார். வானில் பயணம் செய்த 18 பேரும் தமிழர்கள் எனவும் தெரியவருகிறது.

பாண்டிச்சேரியில் பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை, வெடிமருந்துகள் மீட்பு. இது சம்பந்தமாக மூன்று இலங்கையர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கக்மன-பல்லெவெல என்னுமிடத்தில் வாகனமொன்றில் வந்த ஆயுதம் தாங்கிய கோஸ்டியொன்று வீட்டில் இருந்த ஒரு தாயையும் அவரது மகளையும் சுட்டுக்கொன்றுவிட்டுச் சென்றுள்ளது.

கிளிநொச்சி இந்திய இராணுவ முகாமிலிருந்து கெலிகாப்டர் மூலம் வட்டக்கச்சிக்குச் சென்ற இராணுவம் அங்கு தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

07.03.88 ரற்ஸ்

அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட எவரும் உடனடியாக அவர்களுடைய சொந்த நாட்டுக்குத் திருப்பியனுப்பப்பட மாட்டார்கள் என்றும், 1986ம் ஆண்டு யுத்த நாடுகளாகக் கணிக்கப்பட்ட லெபனன், இலங்கை, உகண்டா நாடுகளிலிருந்து அகதியாக வந்தவர்கள் எஸ்.பி.டி கட்சியினர் ஆளும் மாநிலங்களிலிருந்து தற்போது திருப்பியனுப்பப்பட மாட்டார்கள் என்றும் பிறீமன் மாநில உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தற்போது பயேர்ன், பாடன்வூட்டன்பேர்க் பகுதிகளில் வசிக்கும் அகதிகள் அங்கிருந்து பிறீமனுக்கு வந்து இரண்டாவது அரசியல் தஞ்சம் கோரி, அவர்களுடைய விண்ணப்பம் விண்டோவ் சமஉந்டி நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டிருப்பின் அவர்கள் மீண்டும் முன்பிருந்த இடங்களுக்குத் திருப்பியனுப்பப்படுவார்கள்.

டொச் செய்தியின் தமிழாக்கம் — ஜி.எச்.டயஸ்

13.03.88

'ஜிகாத்'இயக்கப் பயிற்சியாளர் கல்முனையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொரவப்பொத்தானையில் முகமூடிக் கோஉந்டியினரால் பயணிகள் வாகனமொன்று வழிமறிக்கப்பட்டு 17 தமிழ், முஸ்லீம் பயணிகள் சுடப்பட்டும், குண்டு வீசியும் கொல்லப்பட்டனர்.

14.03.88

வவுனியா எல்லைப் பகுதியில் முகமூடிக் கோஉந்டியொன்றினால் கொள்ளைகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு வேளைகளிலும் முகமூடிக் கொள்ளையர்களால் ஆயுத முனைகளில் நடாத்தப்படும் கொள்ளைகள் அதிகரித்துள்ளன.

23.3.88

வவுனியா மாவட்டத்தில் உள்ள இரண்டு சிங்களக் கிராமங்களின்மீது 21.3 88. அன்று நள்ளிரவில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் மொத்தம் 14குடிமக்கள் கொல்லப்பட்டனர். 4 பேர் படுகாயங்களுக்கு உள்ளானார்கள். சுமார் 40 பேர்கொண்ட ஆயுதக் கோஷ்டியொன்று இத்தாக்குதலை நடத்தியிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக அவர்கள் இருக்கலாம் எனப்படையினர் சந்தேகிக்கின்றனர்.

வடபகுதியிலுள்ள சந்திகள் தோறும் உள்ள சென்றிகளில் தற்போது ஏராளமான இந்திய அமைதிப்படையைச் சேர்ந்த பெண்களும் கடமை புரிகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தீமைகளின் ஆணிவேர் வரதட்சணை

மனிதவர்க்கம் படைக்கப்பட்டதே, இல்வாழ்க்கை மேற்கொண்டு மனிதவர்க்கத்தை பெருக்குவதற்கே. இறைவனின் நாட்டத்தை அவனால் படைக்கப்பட்ட கணக்கிலா படைப்புக்களில் ஒருவனான, மனிதனால் நிச்சயமாக பூர்ணமாக உணர்ந்து கொள்ள முடியாது.

தன்னை புகழுவதற்காகவும், பெருமைப் படுத்துவதற்காகவும், தனக்கு நன்றி செலுத்துவதற்காகவும் மட்டும், இறைவனின் நோக்கமாக இருந்திருப்பின் வெறும் ஆண் வர்க்கத்தை மட்டும் படைத்திருப்பான். அல்லது பெண் வர்க்கத்தைமட்டும் உண்டாக்கி இருப்பான்.

ஆணுக்குப் பெண்

பெண்ணுக்கு ஆண்

என்று படைக்கப்பட்டுள்ளதின் நோக்கமே ஆணோடு பெண்ணும், பெண்ணோடு ஆணும் ஒருங்கிணைந்து, மனம் ஒருமித்து இல்லறம் என்ற அற வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதே.

இது இறைவனால் விதிக்கப்பட்ட விதி.

உலக நியதி

மானிட வர்க்கத்திற்கு மட்டுமின்றி, மற்ற மற்ற ஊர்வன, பறப்பன, நெளிவன நீந்துவன, ஆகிய படைப்பினங்களும் இந்த நியதிக்கு உட்பட்டுத் தான் படைக்கப்பட்டுள்ளன. இயங்குகின்றன.

மனிதனின் ஊனக்கண்களுக்கு தெரியும் படைப்புக்கள் சில. இறைவனின் சாம்ராஜ்ஜியத்தில் இன்னும் எத்தனை படைப்புக்கள் உள்ளனவோ?

ஆனால்...

மனித வர்க்கத்திற்கு சிலபல சிறப்புக்கள் அருளப்பட்டுள்ளன. அதாவது மற்ற படைப்புக்களுக்கு





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தரப்படாத, ஆறாவது அறிவை மனிதனுக்கு கொடுத்துள்ளான் இறைவன்.

இதன் உதவியால், நல்லது கெட்டவைகள், உணரப்படுகின்றன.

மனித வர்க்கத்திற்கு மட்டுமல்லாமல், மற்ற மற்ற படைப்புக்களுக்கும் இன விருத்தி செய்யும் காம உணர்வை அளித்துள்ளான்.

உலகிலுள்ள அனைத்து படைப்புகளுக்கும் ஒரு கால கட்டத்தில் சுயமாக, காம உணர்வு சுரக்கிறது. எந்த படைப்பாக இருப்பினும் இந்த உணர்வை தணித்துக் கொள்ள வேண்டியது அவசியத்திலும் அவசியம்.

இன்றேல், அனைத்துப் படைப்புகளும் பற்பல நோய்களுக்கும் விளைவுகளுக்கும் விபரீதங்களுக்கும் ஆளாக நேரிடும்.

குறிப்பாக மனித இனத்திற்கு சில பல விதிமுறைகள் இறைவனாலேயே, அவனது தூதுவர்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளன.

மேலும் அவ்விதிமுறைகளை தெளிவாக புரிந்து கொள்ளவும் செயல்படுத்தவும் பிரத்தியேகமாக, மற்ற படைப்புக்களுக்கு இல்லாத, ஆருவது அறிவை தந்துள்ளான்.

அதாவது நன்மை—தீமைகளை நன்ருக புரிந்து கொள்ள முடியும்.

கண்களிருந்தும் கவனக்குறைவால், அலட்சிய மனப்போக்கால், குழியில் விழுகின்ருன் மனிதன்.

இவ்வாறே,

இல்லறம் என்ற நல்லறத்தை மேற்கொள்ளுவதில், இறைவனால்திட்ட்வட்டமாக தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு மாருக, நியதிகளை மீறி,

மனம் போன போக்கில், மிருகங்களைவிட கேடு கெட்டவனாக நடந்து கொள்கின்றான். அதன் பலாபலன்களை, கேடுகளை, விளைவுகளை சந்திக்க நேரிடும் போது தான், அனுபவிக்க நேரிடும் போது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தான், தன் தவறை உணருகின்றான். இதற்கிடையே காலங்கடந்து விடுகிறது.

இதனால் தான் "Regret comes too late". என்றும் A day after the fair என்றும் சொல்வதுண்டு

அதாவது தவறு செய்தபின் வருந்துவதும், சந்தைக்கு, மறுநாள் செல்வதும் பயன்தராது.

"குடி குடியைக் கெடுக்கும்" என்று கொட்டை எழுத்துக்களில் வாசற்படி முகப்பில் எழுதி விட்டு,

அதைவிட பெரிய எழுத்துக்களால் "சாராயக் கடை" என்று எழுதி, அதற்கு செல்லும் வழியை சிவப்பு அம்புக்குறியால் வரைந்து காட்டியும், அங்கு பகிரங்கமாக சாராயம் விற்கப்படுவதும்

குடியை உள்ளபடியே நீக்குவதற்கு வழி வகுத்த தாகுமா ?

கேலிக் கூத்தல்லவா இது ... !

குழந்தையை கிள்ளியும் விட்டுவிட்டு, தொட்டிலை யும் ஆட்டுவது போலல்லவா இருக்கிறது.

யாரும் சொல்லிக் கொடுக்கப்படாமலேயே, யாரா லும் தூண்டிவிடப்படாமலேயே, சுயமாக சுரக்கும் காம உணர்வை தணித்துக்கொள்ள உதவும் முறை யான — நேர்மையான—அங்கீகரிக்கப்பட்ட சாதனமே திருமணம்.

அத்தியாவசமான இந்த திருமணத்துக்கு தடைக் கல்லாக, மனித வர்க்கத்தை கவ்விக்கொண்டிருக்கும் கொடிய நோய்,

வரதட்சணைப் பேய்.

இந்த நோய் — பேய் உலகெங்கும் பரவி இருக் கிறது.

சில நாடுகளில் பெண் வீட்டாரிடம் மாப்பிள்ளை வீட்டார் வரதட்சணை என்ற பெயரில் பெரும் பணத்தை வசூலிக்கின்றனர்.

வேறு சில நாடுகளில் மாப்பிள்ளை வீட்டாரிடம், பெண் வீட்டார் வரதட்சணை வசூலிக்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யார் யாரிடம் பணம் எதிர்ப்பார்த்தாலும், இரு பாலாருக்கும் திருமணம் தடைபடுகிறது. வசதியுள்ள வர்களிடம், வசதியுள்ளவர்கள், வரதட்சணையை எதிர்ப்பார்ப்பதில் சிறிதளவாவது அர்த்தம் இருக் கிறது.

ஆனால்.........

வசதியில்லாதவர்களிடம், வ ர த ட் ச ணை யை வற்புறுத்துவதில் என்ன

நியாயம் இருக்கிறது?

திருமணம் என்பது, ஆணுக்கும் பெண்ணுக்கு மிடையே, இல்லறம் நடத்த மேற்கொள்ளும் ஒப்பந்த மாகும். எனவே இதிலே பணப்பிரச்சினைக்கு இடமே இல்லை.

ஆண் கட்டிக் கொள்வது பெண்ணைத்தான் பெண் கட்டிக் கொள்வது ஆணைத்தான்.

எந்த ஆணும் பணத்தை கல்யாணம் செய்து கொள்வதில்லை. எந்த பெண்ணும் ப ண த் தை மணந்து கொள்வதில்லை.

பணத்தை மணந்து கொள்வதால், காம உணர்வு தீர்ந்து விடுமா ?

காம உணர்வு தணிய ஆணுக்கு பெண் தேவை. பெண்ணுக்கு ஆண் தேவை.

ஆக,

திருமண விஷயத்தில், பண்பு, படிப்பு அழகுப் பொருத்தம் பார்க்க வேண்டுமே தவிர, வரதட்சணைக்கு இடமளித்தால்,

அங்கு பண்பும் இருக்காது.

படிப்பும் இருக்காது.

அழகும் இருக்காது.

வரதட்சணைத் தொகை அதிகமாக ஆக, அவற்றில் மற்றவையெல்லாம் மூழ்கி விடுகின்றன.

www.tamilarangam.net

பெண் படித்திருக்கிறதே, சம்பாதிக்கவும் செய்கிறாளே,

பண்புள்ளவளாக இருக்கிறாளே,

அழகுள்ளவளாக இருக்கிறாளே,

இவற்றைக் கருத்தில்கொண்டால், வரதட்சணைப் பணத்திற்கு ஆசைப்பட மாட்டார்கள்.

வரதட்சணைப் பணம் வாங்கி வாழ விரும்புபவன், அந்தப்பணம் செலவழிந்து விட்டபின், எப்படி அவன் மனைவியைக் காப்பாற்றுவான்?

மனைவியை பரிபாலிக்கக் கையாலாகாதவனுக்கு கல்யாணம் ஒரு கேடா ?

"பொருள் இல்லாதோர்க்கு இவ்வுலக மில்லை;

அருள் இல்லாதோர்க்கு அவ்வுலக மில்லை"

உண்மைதான்.

இதற்காக பிறர் பொருளுக்கு ஆசைப்படுவதா?

சுயமாக சம்பாதித்து சாப்பிடுவது தானே சிறந்தது. போயும் போயும் பெண்ணிடமிருந்து பணம் வாங்கிச் சாப்பிடுவதா ?

கேவலத்திலும் கேவலமான இத்தகைய வாழ்க்கை ஒரு வாழ்க்கையா ?

ஆணுடைய கை எப்போதும் உயர்ந்தல்லவா இருக்க வேண்டும்.

தாழலாமா ?

இதைவிட பிச்சை எடுத்து சாப்பிடலாமே. வாழ்ந்தால் மானத்தோடு வாழ வேண்டும். இன்றேல் செத்துமடிய வேண்டும்.

**விபரீதங்கள் :**

நான்கைந்து பெண்களை பெற்றெடுத்தவர்களின் பாடு சொல்லிக் காட்ட முடியாது.

ஒரு குழந்தையை பெற்று வளர்த்து, படிக்க வைத்து ஆளாக்குவதே பெரும்பாடு.

இந்நிலையில் நான்கைந்து பெண்களை பெற்றவரின் கதி என்னமாக இருக்கும்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வளவுக்குப்பின், அப்பெண்களை கட்டிக் கொடுக்க வரதட்சணை வேறு கொடுக்க வேண்டுமானால் .........

இதனால், நூற்றுக்கணக்கான பெண்கள் வயதுக்கு வந்தும் வருஷக்கணக்கில் கரையேற முடியாமல், கரைந்து கொண்டிருக்கின்றனர்.

கொலைகளும் தற்கொலைகளும் நித்தம் நித்தம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

மயிர் கூச்செறியும் சம்பவங்களை பத்திரிகை வாயிலாக படிக்கிறோம்.

குமரிப் பெண்களின் தேக்கம் பெருகுகின்றது, இதனால் விபசாரம் உருவாக ஏதுவாகின்றது. விபசாரம் பெருகுவதால் நோய்கள் பரவுகின்றன. மனநிலை பாதிக்கப்படுகிறது. வாழ்க்கை நரகமாகின்றது.

பண்பு காற்றிலே பறக்க விடப்படுகின்றது. எத்தனை எத்தனையோ கோரவிளைவுகள்.

இத்தனையும் வரதட்சணைப் பேயால் உருவாகின்றன.

குமருகளின்
குரல்வளையை
நெரிக்கும்

வரதட்சணைப் பேய்

• பி. ஏ. ஏ. •

Goodwill Publishers,
5 Appaou Gramany Lane,
Ellis Road, Madras-600 002



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உலகம்

## கொண்டுராஸ்

கப்பல் ஓட்டி கொலம்பசினால் 1502ம் ஆண்டு கொன்டுரஸ்(HONDURAS )நாடு கண்டுபிடிக்கப்பட்டது. கொன்டுரசின் தென்பகுதியில் நிக்கராகுவாவும் தென்மேற்கில் எல்சல்வடோரும் மேற்கில் கௌதமாலாவும் அண்டைநாடுகளாக உள்ளன. வடக்கே கரீபியன் கடலுண்டு. 1,12,088 சதுர கிலோமீட்டர் விஸ்தீரணமுடைய கொன்டுரஸ் 330 கிலோமீட்டர் நீளமான கடற்கரையோரத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. இங்கு 40,34,900 மக்கள் வாழ்கிறார்கள். ஸ்பானிஸ் மொழியே உத்தியோகபூர்வ மொழியாகும். மெஸ்டிக்கோ இனத்தவர் 90 வீதமும் ஆபிரிக்க இனத்தவர் 5 வீதமும் இந்திய இனத்தவர் 4 வீதமும் வாழ்கிறார்கள். 200 யூதர்களும் வாழ்கிறார்கள்.

கொன்டுரஸ் வறுமையில் வாடும் ஒரு நாடு. இங்கு கோப்பி அரிசி, புகையிலை, வாழைப்பழம் ஆகியன அதிகளவில் உற்பத்தியாகி ஏற்றுமதியாகின்றன. இவையே இந்நாட்டின் தேசியவருமானத்தை ஈட்டித்தருவனவாகும். அதிக தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய கனிப்பொருட்களும் கிடைக்கின்றன. இங்கு மூன்றில் இரண்டு பகுதி மக்கள் முதலாளிகளின் பண்ணைகளிலும் ,வயல்வெளிகளிலும் வேலை செய்கிறார்கள். அரைவாசிக்கு மேற்பட்ட மக்களுக்கு எழுத வாசிக்கத் தெரியாது.

கொன்டுரஸில் 18வருட இராணுவ ஆட்சியின் பின்னர்1982 ஜனவரியில் 78 அங்கத்தவர்களைக் கொண்ட சிவில் நிர்வாகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அந்நாட்டின் ஜனாதிபதியாக"சுயசா கொர்டோவா" பதவியேற்றார். வறுமையைத் தாங்கிக் கொள்ளமுடியாத ஜனாதிபதி சுயசா கொர்டோவா அமெரிக்காவிடமிருந்து கடன்களைப் பெறத்தொடங்கினார். நாட்டினை அபிவிருத்தி செய்து வாழ்வதிலும் பார்க்க கடன்பட்டு வாழ்வது சுலபமாக இருந்தது ஆட்சியாளருக்கு. லத்தீன் அமெரிக்க நாடுகளின்மேல் ஆதிக்கம் செலுத்த கொன்டுரஸ் தேவை என்பதை உணர்ந்த அமெரிக்கா கொன்டுரஸிற்குத் தேவைக்கு அதிகமான உதவிகளைச் செய்துவந்தது. கொன்டுரஸிற்கு அண்டைநாடாக நிக்கராகுவா இருந்தமையால் நிக்கராகுவாவை கவிழ்ப்பதில் குறியாக இருக்கும் அமெரிக்கா கொன்டுரஸ் அரசுமீது தனது செல்வாக்கைச் செலுத்தத் தொடங்கியது. கொன்டுரஸ் அமெரிக்காவிடம் கடன் உதவி பெற்றதன் விளைவு எதிர்மறையாக மாறத்தொடங்கியது. கடன் கொடுத்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இடத்தைப் பிடிப்பது போன்று அமெரிக்கா கொண்டுரஸில் 32 இடங்களில் இராணுவத்தளங்களைக் கட்டியெழுப்பியுள்ளது.

நிக்கராகுவா ஓர் ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆட்சியைக் கொண்டிருப்பதால்தான் அமெரிக்கா நிக்கராகுவா ஆட்சியை கவிழ்க்க முயல்கிறது.

ஆசியாவில் ஆதிக்கம் செலுத்தவிரும்பும் எந்த வல்லரசுக்கும் இலங்கை கேந்திரமையமாக அமையும். அதேபோன்று லத்தீன் அமெரிக்கநாடுகள்மேல் ஆதிக்கம் செலுத்த கொண்டுரஸ் நாடு முக்கியத்துவம் வகிக்கிறது. இனப்பகையைத் தீர்க்கவோ, வறுமையைத் தீர்க்கவோ வல்லரசுகளை வரவழைப்பது அந்நாட்டுக்கு மாத்திரமன்றி அயல்நாடுகளுக்கும் தீங்காக முடியும். இதற்கு நல்ல உதாரணம் கொண்டுரஸ் ஆகும். இந்நாட்டின் சுதந்திரம் பறிபோய்க் கொண்டிருக்கிறது. மற்றைய நாடுகளுக்கு இதனால் வரும் ஆபத்தையும் இந்நாடு யோசிக்கவில்லை.

அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைகளுக்கு மத்திய அமெரிக்காவில் பெரும் கேந்திரத் தளமாக கொண்டுரஸ் விளங்குகிறது. நிக்கராகுவா "சண்டினிஸ்டா" ஆட்சியை வீழ்த்துவதற்கு அமெரிக்கா கொன்ட்ரா கிளர்ச்சியாளர்கள் 12000 பேருக்குகொண்டுரஸில் பயிற்சியளிக்கிறது. நிக்கராகுவா இடதுசாரி அரசை வீழ்த்தப் போராடும் கொன்ட்ரா கிளர்ச்சிப் படைகளுக்கு ஆயுத பொருளாதார உதவி வழங்க வேண்டுமென ஜனாதிபதி றீகன் முடிவு செய்தார். அதற்கமைய 12 கோடி டாலர் உதவி வழங்கப்பட்டது. மத்திய அமெரிக்காவில் அமெரிக்கா தனது இராணுவ நடவடிக்கைகளைக் கையாளத் தொடங்கியதன் பின்னர் வரலாறு காணாத தோல்விகளைச் சந்தித்து வருகிறது. இதனைச் சமாளிக்கவே அமெரிக்கா கொண்டுரஸ் நாட்டைக் கைப்பொம்மையாக பாவித்து வருகிறது.


நிக்கராகுவா அரசைக் கவிழ்க்கப் போராடும் கிளர்ச்சியாளருக்கு பயிற்சியளிப்பதற்கு கொண்டுரஸ் நாட்டுக்குச் சொந்தமான எல்டிகார் எனப்படும் தீவு பயன்படுத்தப்படுகிறது. நிக்கராகுவாவிலிருந்து 12 மைல் தொலைவிலுள்ள இத்தீவு கரீபியன் கடல் எல்லையில் அமைந்துள்ளது. நிக்கராகுவாத் துறைமுகத்திற்கு கண்ணிவெடி இத்தீவிலிருந்தே தாவப்பட்டது. 1961ம் ஆண்டு கியூபா மீதான அமெரிக்கப் படைகளின் தாக்குதல் முயற்சிக்கு இத்தீவே பயன்படுத்தப்பட இருந்தமை குறிப்பிடத்தக்கது.

குமுதினி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கனவை மிதித்தவன்

— பார்த்திபன்

"அடி"

"குத்து"

"நெருப்படி"

"பின்னால வாறான்"

ஒரு மனிதன் இன்னொரு மனிதனை அடித்து, நொருக்கிப் பிசைந்து கொண்டிருப்பதை தொலைக்காட்சிப் பெட்டியில் கண்களைப் பதித்துக் கொண்டிருந்த எல்லோரும் தங்களை மறந்து ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த அறையே ரசிகப் பெருமக்களால் நிரம்பியிருந்தது. கிடைத்த இடங்களிலெல்லாம் ஆட்கள் தங்களை நிரப்பியிருந்தார்கள். அவ்வப்போது கை, கால்களை அசைத்து தமது விமர்சனங்களை பரிமாறிக் கொண்டார்கள்.

"டேய் கிங்கொங் பண்டி"

"சாத்தப் போறான்"

"மொறாக்கோ மயிரைவிட்டான்"

"உந்த வெவ்ரியும் ஊத்தவாளி"

'றெசிலிங்' திரையில் தொடர்ந்து கொண்டிருந்தது. மேடையில் வைத்தும், கீழே வைத்தும் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டார்கள். கைகளை முறுக்கினார்கள். தூக்கித் தலைகீழாகக் குத்தினார்கள். மூக்கை உடைத்தார்கள். மத்தியஸ்தர் கூட அவ்வப்போது தாக்கப்பட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஞானம் அப்போதுதான் வெளியேயிருந்து வந்தான். முகம் கறுத்து காய்ந்து போயிருந்தது. போட்டிருந்த உடைகளில் தூசி மெல்லிதாகப் படிந்திருந்தது. தடித்த கறுப்புச் சப்பாத்துகளில் மண் ஒட்டியிருந்தது.

அறையைத் திறந்து, பார்வையாளர்களைத் தொந்தரவு செய்யாமல் ஓரமாக நின்று உடுப்பை மாற்றினான். கால்கள் சப்பாத்திலிருந்து செருப்புக்கு இடம் பெயர, துவாய், சோப், உடும்புகளை எடுத்துக் கொண்டு குளியலறைக்கு வந்தான் ஞானம்.

குளியலறையும், மலசலகூடமும் அங்கே ஒற்றுமையாக இருந்தன. நிலத்தில் மயிர்கள் தானம் செய்யப்பட்டிருந்தன. 'கொமெட்'டுக்குப் பக்கத்தில் முற்கூட்டியே பியர் போத்தலில் நீர் பிடித்து வைக்கப்பட்டிருந்தது. ஜன்னலில் வைக்கப்பட்டிருந்த கடதாசி உருளை காற்றில் சீர்குலைந்திருந்தது.

கதவைப் பூட்டிக் கொண்டு தொட்டிக்குள் இறங்கிய ஞானம் குழாயைத் திறந்தான். வெந்நீரையும், குளிர் நீரையும் கலக்கவிட்டு அளவான சூட்டைப் பெறுவதில் ஒரு நிமிடம் செலவழிந்தது. ஞானம் ஆர்வமாக நனைந்தான். உடம்பிலுள்ள அழுக்கையெல்லாம் நீரால் கழுவி விட முயன்று கொண்டிருந்தான்.

ஞானம் இப்போது நன்றாக மாறிவிட்டான். தங்கையின் அகால மரணம் பற்றிய பிந்திய செய்தியைப் படித்ததிலிருந்து பழைய ஞானத்தை ஒருவராலும் காண முடியவில்லை.

அதிகாலையே எழுந்து வேலைத் தேடிப் போய்விடுவான். மறுபடி அவனின் வரவு இரவு பத்து மணிக்கு மேலாகத்தான் இருக்கும். எங்கே போனாலும் வேலை அனுமதிப் பத்திரத்தைக் கேட்டார்கள். முதலில் ஜேர்மனியர்கள், இரண்டாவது ஐரோப்பியர்கள், கடைசியாகத்தான் நீங்கள் என்று சொல்லி வேலை வழங்கல் அலுவலகம் அவனுக்கு வேலை அனுமதி வழங்க மறுத்துவிட்டது. அதனால் அவன் 'கறுப்பு' வேலைக்கே முயற்சித்துக் கொண்டிருந்தான். அதுவும் சுலபமாகக் கிடைப்பதாக இல்லை.

ஞானம் டிஸ்கோ போவதும் நின்றது. புது உடுப்புகள், சங்கிலிகள் போட்டு 'உசாக்கு' பண்ணுவதும் நின்றது. பியர் கூட எப்போதாவது சில நாட்கள்தான். மாயாஜால வித்தைகளில் கைக்குட்டை புறாவாகிப் பறப்பது போல ஞானம் முற்று முழுதாக மாறிவிட்டான். அவனால் காசு செலவழிக்கப்படும் நண்பர்களுக்குத்தான் அவனுடைய மாற்றம் சோகத்தைத் தந்துவிட்டது.

உழைப்பு. அது ஒன்றுதான் தற்போதைய ஞானம். தேடலில் அவனுடைய முழு நேரமும் செலவழிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. பல இடங்களில் 'கறுப்பன்' என்று சிரித்தார்கள். வேலை எதுவும் கைவசம் இல்லையே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்று சில இடங்களில் வருத்தம் தெரிவித்தார்கள். 'பாவம்' என்று சொல்லி இரண்டு, மூன்று மணித்தியால தற்காலிக வேலைகள் அவ்வப்போது கிடைத்தன.

ஈரமான ஞானம் தொட்டியிலிருந்து வெளியே வந்து துவாயால் உடலை உரசினுன். ஈரலிப்பு காணுமல் போய்க் கொண்டிருந்தது. இடுப்பில் துவாயுடன் அவன் அறைக்கு வந்தபோதும் ரெசிலிங் முடிந்திருக்கவில்லை. கீழே விழுந்திருந்த ஒருவனை மலைப்பாம்பொன்று மிகவும் இறுக்கமாக அணைத்துக் கொண்டிருக்க, அவன் நரை கக்கிக் கொண்டிருந்தான். மத்தியஸ்தரை மேடையின் எந்த பாகத்திலும் காண முடியவில்லை.

ஞானம் உடைகளைப் போட்டுக் கொண்டு சமையலறைக்கு வந்து இரவுச் சமையலை யோசித்தான். சகபாடிகள் தற்போதைக்கு சமையலில் கலந்து கொள்ளும் உத்தேசம் எதுவும் தெரியவில்லை. அதனுல் அவன்தான் ஆரம்பிக்க வேண்டும்.

மத்தியான மீதிகளை அல்டி பாக்கிற்குள் கொட்டி, பாத்திரங்களை சுத்தப்படுத்தி, பெரிய பாத்திரத்தில் நீர் பிடித்து, மின் அடுப்பில் வைத்தான். 'உலை' வைத்தாகிவிட்டது. அடுத்தது அனுமானங்கள்.

குளிர்சாதனப் பெட்டியை ஆராய்ந்தான். கோழியொன்று அநியாயமாக விறைத்து, கல்லாகியிருந்தது. கத்தியால் அதை நெம்பிக் கிளப்பிச் சுடுதண்ணீர் நிரம்பியிருந்த சட்டியொன்றிற்குள் போட்டான். பனியிலிருந்து அந்தக் கோழி விடுதலையடைய எப்படியும் அரைமணித்தியாலத்திற்கு மேலாகும். அதுவரை ஏனையவற்றை வெட்டிக் கொத்தலாம்.

கோவா கீழ் தட்டை நிரப்பிக் கொண்டிருந்தது. கரட் சாதுவாக கசிந்திருந்தது. தக்காளிப் பழங்கள் இவற்றுக்கிடையில் திணறிக் கொண்டிருந்தன. இவற்றில் கோவா தேர்ந்தெடுக்கப்பட்டது.

பலகையை எடுத்து வைத்து, கோவாவைப் படுக்க வைத்து அறுக்க ஆரம்பித்தான் ஞானம்.

"அண்ணை, இந்த மட்டையளுக்கு கலர் பேப்பர் ஒட்டித்தாறியா?"

"என்ன செய்யப் போறுய்?"

"பள்ளிக்கூடத்தில பொருட்காட்சி வருகுது. நான் வீடு செய்து கொண்டு போறன்"

"பெரிய இஞ்சினி. வீடு கட்டுறுவாம். என்னைக் குழப்பாம அங்கால போ"

"அண்ணை அச்சா அண்ணையெல்லே. எல்லாம் முடிஞ்சுது. உன்னட்டத்தான் கலர் பேப்பர் இருக்கு. ஒருக்கா ஒட்டித் தரவன்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நான் இப்ப என்ன செய்து கொண்டிருக்கிறன் என்டு தெரியேல யே? . பிறகு ஆறுதலா வா பாப்போம்"ஞானம் சைக்கிளைத் துடைத்துக் கொண்டிருந்தான். மஞ்சு அந்த இடத்தைவிட்டுப் போவதாக இல்லை.

"'அண்ணை பேப்பரையாவது தாவன். நான் ஒட்டுறன்"

"அங்கால போடி. இதுக்க வந்து கரைச்சல் குடுத்துக் கொண்டிருக்கிறாய்"ஞானம் மஞ்சுவைத் தள்ள, அவள் கையிலிருந்த அட்டை வீடு கீழே விழுந்து துண்டுகளானது. மஞ்சு சோகமாகப் பொறுக்கினுள்.

"குரங்குக்குத் தெரியுமே பூமாலையெண்டு"

"'என்ன சொன்னனி? "ஞானம் கோபத்துடன் துரத்த, மஞ்சு அம்மாவிடம் சரணடைந்தாள்.

அடுப்பில் வைத்த தண்ணீர் கொதித்து மூடியைத் தாளம் போட வைக்க, ஞானம் நினைவுகள் சிதறி, கண்களைத் துடைத்துக் கொண்டான். அரிசியைக் கழுவி கொதித்துக் கொண்டிருந்த நீருக்குள் போட்டுக் கலந்தான். 'நான் குரங்குதான். அதாலதான் பூமாலையைத் தெரியேல'. மறுபடி கண்ணீர் வந்தது.

'ஜேர்மனிக்கு வந்தாப் பிறகு எவ்வளவு சுலபமா குடும்பத்தை மறந்து போனன். வெறும் போலியிலதான் இவ்வளவு நாளும் இருந்திருக்கிறன். நான் ஊரில இருந்திருந்தா மஞ்சு செத்திருக்க மாட்டாள். அவள் தனிய கடைக்குப் போக வேண்டிய அவசியம் வந்திருக்காது. குண்டு விழுந்து அவதிப்பட்டிருக்கவும் நேர்ந்திராது. அந்தக் குழந்தைப் பெட்டையின்ரை சாவுக்கு நான்தான் காரணம்' அதிஉஷ்டவசமாக கத்திகையைக் கவனிப்பதற்கு முன்ஞானம் கவனித்து விட்டான். கோவா அடையாளம் தெரியாமல் உருக்குலைந்திருந்தது.

'இப்ப அம்மாவும், அக்காவும் என்ன கஉஷ்டப்பட்டுக் கொண்டிருக்கினமோ? அவைக்கு ஆறுதல் சொல்ல ஆர் இருக்கினம்? அங்க அதுகள் கஉஷ்டப்பட, இங்க நான்?'

இரண்டாவது அடுப்பில் இன்னொரு சட்டி வைக்கப்பட்டு கோவா வேக ஆரம்பித்தது. கோழிக்குக் கொடுக்கப்பட்ட அவகாசம் முடிந்து அறுவைக்குத் தயாரானது.

'இந்த நிலமையில நான் என்ன செய்ய வேணும்? அம்மா, அக்கா ஊரில தனிய இருந்து கஉஷ்டப்படேக்க நான் மட்டும் இங்கே வசதியா இருக்கிறதா? அநுலைக் கான்சல் பண்ணிப் போட்டு ஊருக்குப் போனால் என்ன? 'கோழியின் சிதையலை அப்படியே வைத்து விட்டு அரிசிப் பாத்திரத்திற்குள் இன்னும் நீர் விட்டான். ஒரு பருக்கையை எடுத்துப் பதம் பார்த்தான். மறுபடி கோழி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'வெறுங்கையோட ஊருக்குப் போய் என்ன செய்யிறது?இருக்கிற துக்கு நல்ல வீடு கூட இல்லை.அதைவிட சாப்பாட்டுக்கு என்ன செய்யிறது?எனக்கு என்ன வேலை தெரியும்?எப்பிடி உழைச்சு குடும்பத்தைக் காப்பாத்துறது?உழைக்க கூடியதை இங்கேயே உழைச்சுக் கொண்டு போனாத்தான் அங்க போய் ஏதாவது செய்யலாம்.ஆறு இஞ்ச வேலை எடுக்கேலாம இருக்கே.என்னதான் செய்யிறது?'

கேத்லாவை இறக்கி கோழியை ஞானம் அடுப்பில் வைக்கும்போது 'ரெசிலிங்' முடிந்து எல்லோரும் 'அரங்கிலிருந்து' வெளிப்பட்டார்கள். ஆட்டத்தில் உணர்ச்சிவசப்பட்டதால் மோதியவர்களைவிட அவர்கள் வியர்த்திருந்தார்கள்.தொடர்ந்து பார்த்ததில் கண்கள் சுருங்கி,முகங்கள் காய்ந்திருந்தன.

"டேய்.மணி பத்தரை.இனியே சமையல்?"

"இனி ஆர் சமைக்கிறது.ரண்டு போத்திலை அடிச்சிட்டு கம்மெண்டு படுக்கப் போறன்"

"இப்ப தொடங்கினாலும் ஒரு மணிக்குத்தான் சாப்பிடலாம் போல இருக்கு."

"கடைசியா சம்பியன் குடுத்த அடி ஒருநேரச் சாப்பாட்டுக்கு சரி"

ஆட்டத்தினால் இரவுச் சாப்பாட்டை மறந்திருந்தவர்கள் இப்போது கவலையாக தங்கள்,தங்கள் அறைக்குக் கலைந்து போனார்கள்.

ஞானத்தின் அறை நண்பர்கள் சமையலறைக்குள் வந்தபோது சாப்பாடு ஆவியுடன் தயாராக இருந்தது.

"என்ன இருந்தாலும் ஞானம் தங்கப்பவுணை பெடியன்தான்"

"இப்பிடிச் சனங்கள் இருக்கிறபடியால்தான் மழை கொட்டுறது"

"சமைச்சவனைக் காணேலே.நீங்கள் வெட்டத் தொடங்கியிட்டியள் என்ன?"

"ஞானம்" ஒருவன் தேடிக்கொண்டு அறைக்குள் வந்தான்.ஞானம் கட்டிலில் சுருண்டு படுத்திருந்தான்.

(இன்னும் வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தெரியுமா?

01. கண் பார்வையற்றோர் படிக்க உதவும் எழுத்துமுறையைக் கண்டுபிடித்தவர் யார்?
02. உலகின் மிகப் பழமையான நாணயம் எது?
03. பர்மா இந்தியாவிலிருந்து தனியே பிரிந்து சென்ற ஆண்டு எது?
04. யானையைத் தவிர தந்தம் தரும் வேறு மிருகம் எது?
05. உலகில் அலுமினிய உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?
06. நீந்தத் தெரியாத இரண்டு விலங்குகள் எவை?
07. உலகின் மிகப் பெரிய தீவு எது?
08. முதன் முதல் வானவெளியில் வெற்றிகரமாகச் செலுத்தப்பட்ட கோளின் பெயர் என்ன?
09. கொக்கி விளையாட்டின் பிறப்பிடம் எது?
10. 1896ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஒலிம்பிக் போட்டிகள் எந்த ஆண்டுகளில் நடைபெறவில்லை?
11. கடலில் வாழும் மீன்களில் மிகவும் வேகமாக நீந்தக் கூடியது எது?
12. உலகிலேயே பெண்களுக்கு கட்டாய இராணுவப் பயிற்சியளிக்கும் நாடு எது?
13. ஊர்வனவற்றில் மிகப் பெரியது எது?
14. பறவைகளில் மிக வேகமாகப் பறக்கக்கூடியது எது?
15. பங்களாதேஉஷின் தலைநகர் எது?

விடைகளை அறிய புத்தகத்தை தலைகீழாகப் புரட்டியே ஆக வேண்டும்.

விடைகள்

01. பிரெயில்
02. சீனர்களின் நாணயமான 'பு'
03. 1945
04. காட்டுப் பன்றி
05. அமெரிக்கா
06. ஒட்டகம், பன்றி
07. கிறீன்லாந்து
08. ஸ்புட்னிக்
09. இங்கிலாந்து
10. 1916, 1940, 1944
11. சுறா
12. இஸ்ரேல்
13. தென்கிழக்காசிய உப்பு நீர் முதலைகள்
14. தங்கக் கழுகு
15. டாக்கா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

கடல்: 1    ஏப்ரல் 1988    கலம்: 4

ைதைகளில்
ரும் பெயர்கள்
ற்பனையே.

க்கதாரர்களே
வர்களின்
க்கங்களுக்கு
பாறுப்பாளிகள்.

ஆசிரியர் குழு.......... கடலோடிகள்

அட்டை, ஓவியம்.................. ரமணி

வெளியீடு............. தென்னாசிய நிறுவனம்

முகவரி.................... SÜDASIEN BÜRO
KIEFERNSTR 45
5600 WUPPERTAL-2
WEST GERMANY.
TEL. 0202-507156

**தவறுகள்**

எந்த மனிதனும் தவறு செய்யக்கூடும்; ஆனால், முட்டாளைத் தவிர வேறு எவனும் அதைத் தொடர்ந்து செய்ய மாட்டான்.

—ஸிஸரோ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

(மாத சஞ்சிகை)

தூண்டிலைக் கிரமமாகப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் கீழே உள்ள தென்னாசிய நிறுவன முகவரிக்கு வங்கி மூலமாக சந்தாப் பணத்தை அனுப்பி வைக்க வேண்டும்.

சந்தா விபரம் (தபாற் செலவு உட்பட)
6 மாதங்கள் - 20 டி.எம்.
1 வருடம் - 38 டி.எம்.


மேற்கு ஜேர்மனி தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு 2 டி.எம். மேலதிகமாகும்.

ஐரோப்பிய நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளில் உள்ளவர்கள் கடிதம் எழுதி சந்தா விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

வங்கி கணக்கு இல. 268540
STADT SPARKASSE WUPPERTAL

BLZ 330 500 00 (இந்த இலக்கத்தை குறிப்பிட்டால் வங்கியினால் கூலிப்பணம் அறவிடப்படமாட்டாது.)

# SÜDASIEN BÜRO




KIEFERNSTR. 45
5600 WUPPERTAL・2
WEST GERMANY.